# ஞானசம்பந்தம்

வே.

தருமையாதீனத் திங்களிதழ்

மலர் 43] இரக்தாக்ஷி ஆண்டு புரட்டாசித் திங்கள் 10-10-84 [இதழ் 11

கந்தசஷ்டி விழாவில்

ஸ்ரீ ஆறுமுகப்பெருமானுக்குச்

சிறப்பு வழிபாடு

24 — 10 — 84

முதல்

29 — 10 — 84

வரை

கந்தசஷ்டி விழா

நடைபெறும்



குருபாதம்

# " ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43 ‖ 10-10-84 ‖ இதழ் 11



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

திருவார் கமலையுள் ஞானப்ர
காசன் திருவடிக்கீழ்
வருவா ரவர்வழி வாரான்
சமனும் மலரயனும்
கருவாய் இடுவதற் கெண்ணுன்
எந்நாளும் கருத்தினில்நீ
வெருவாய்சுகத்தினில்வாழ்வாய்
பரானந்தம் மேவிடுமே,

— ஞானப்பிரகாசமாலை 1

ஆசிரியர் :-

வித்துவான்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்

சி. அருணைவடிவேல்முதலியார்

## உட்பொருள்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | கோயில் நல்வாழ்வின் வாயில் | ... 521 |
| 2 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | ... 526 |
| 3 | சித்தாந்த சைவமும் வீர சைவமும் | ... 533 |
| 4 | மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள் வழங்கிய பேருரை | ... 537 |
| 5 | திருவருட்பாத் திரட்டு | 543 |
| 6 | அபிராமி அந்தாதி | ... 547 |
| 7 | நஞ்சுண்ட அமுதே போற்றி ! | ... 551 |
| 8 | கடிதங்கள் | 554, 568 |
| 9 | கதிரவன் குடும்பம் | ... 555 |
| 10 | பாலின் பலவகைப் பயன்கள் | ... 558 |
| 11 | திருநாவுக்கரசர் | ... 562 |
| 12 | செய்திகள் | ... 569 |
| 13 | எதிர்காலம் | ... 573 |
| 14 | ஞானசம்பந்தம்பதிப்பக வெளியீடுகள் | ... 577 |

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 25
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 35
ஆயுள்சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள்சந்தாவெளிநாடு ரூ. 350

# ஸ்ரீ கயிலைக் குருமணி நினைவுச் சிறுகதைப்போட்டி

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்களின் நினைவாக இந்தச் சிறுகதைப்போட்டி அமைக்கப்பட்டுள்ளது.

பல அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிக் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. சிறுகதை அனுப்பப்பட வேண்டிய

கடைசிநாள் 15-12-84.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு ரொக்கம் | ... | ரூ. | 1001—00 |
| இரண்டாவது பரிசு | .... | ரூ. | 501—00 |
| மூன்றாவது பரிசு | ... | ரூ. | 251—00 |

ஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் இனிய குரலில் எளிய நடையில் சமய தத்துவங்கள் தோத்திர சாத்திரங்கள் வேதாகம புராணங்கள் - இவற்றைப்பற்றித் தெளிவாக மக்கட்கிடையே அறிவித்து வளர்த்தவர்கள். பல கல்விநிலையங்களை நிறுவி வளர்த்தவர்கள். திருக்கோயில்களை அருட் பொலிவோடு வளர்த்தவர்கள். கயிலை முதல் கன்னியாகுமரிவரை பலமுறை யாத்திரை செய்தவர்கள். ஆதீன வரலாற்றில் பொற்காலம் கண்டவர்கள்.

1. போட்டிக்கான சிறுகதைகள் அனுப்பப்பட வேண்டிய கடைசி நாள் 15—12—84. தாமதமாக வந்துசேரும் கதை எதுவும் போட்டியில் சேர்க்கப்பட மாட்டாது என்று எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2. போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் **ஸ்ரீகயிலைக் குருமணி நினைவுச் சிறுகதைப் போட்டி** என்று உறையில் குறிப்பிட்டு, ஆசிரியர், ஞானசம்பந்தம், தருமை ஆதீனத் திங்கள் இதழ், ஞானசம்பந்தம் செயலகம், தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை 609 001, தஞ்சை மாவட்டம் என்ற முகவரிக்கு அனுப்பப் பெறல் வேண்டும்.

3. எழுத்தாளர்கள் எழுதியனுப்பும் சிறுகதைகள் அவர்களது சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே வெளிவந்த கதையாகவோ, கதையைத் தழுவியதாகவோ கதையின் அடிப்படையைக்கொண்டதாகவோ இருத்தலாகாது. எழுத்தாளர்கள் கதைகளை அனுப்பும்பொழுது, "இச்சிறுகதை எனதுசொந்தப்படைப்பேயாகும் என உறுதியாகக்கூறுகிறேன்" என ஓர் உறுதிமொழியுடன் அனுப்பப்பெறவேண்டும். அன்பு கூர்ந்து எழுத்தாளர்கள் இதனைமறவாது பின்பற்றவேண்டும்.

4. அனுப்பப் பெறும் சிறு கதைகள் " ஞானசம்பந்தம் " இதழில் ஆறு பக்கங்களில் அடங்கும் அளவிற்கு (டெமி 1×8) அளவில் இருத்தல் வேண்டும். தாளில் ஒரு பக்கம் மட்டுமே கதைகள் எழுதப்படல் வேண்டும். எழுத்துத் தெளிவாகவும் வாசிக்குமாறும் இருத்தல் வேண்டும்.

5. சிறுகதை எளிய, இனிய, தெளிவான நடையில் அமையப் பெறல்வேண்டும். தேர்வில் நடை அம்சம் சிறப்பாகக் கருதப்படும்.

6. சிறுகதையின் கருப்பொருள், மக்களிடையே இந்து சமயச்சிறப்பை எடுத்துக்காட்டுவதாக இருத்தல் வேண்டும். குறிப்பாக சைவசமயச் சார்பான தெய்வநம்பிக்கையையும் பக்தியையும் வளர்ப்பதாகவும், நல்லொழுக்கத்தையும், பண்பாட்டையும் ஊட்டுவதாகவும், ஆன்றோர் பின்பற்றி வாழ்ந்த அரும்பெரும் அறநெறிகளைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதாகவும் அமைதல் வேண்டும். இவற்றில் ஏதாவது ஓர் அம்சத்தை அழுத்தமாக வற்புறுத்தி எழுதினாலும் போதுமானது.

7. மூன்று பரிசுகள் வழங்கப்பட உள்ளன. **முதல்பரிசு ரொக்கம் ரூ. 1001-ம், இரண்டாவதுபரிசு ரூ. 501-ம் மூன்றாவதுபரிசு ரூ. 251-ம்** அளிக்கப்படும். பரிசு பெறாத, தகுதியுள்ள கதைகள் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

8. பரிசுக்கு உரிய சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பதில் தேர்வுக்குழுவின் தீர்ப்பே முடிவானது. இத்தேர்வுக்குழு, தருமை ஆதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் நியமனம் செய்யப்படும்.

9. சிறுகதைப் போட்டியில் பரிசுக்கு உரியதல்லாத கதைகள் எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பப் பெறமாட்டா. ஆகையால் எழுத்தாளர்கள் தங்கள் படைப்பின் ஒருபிரதியைத் தங்கள் வசம் வைத்துக்கொள்வது நலம்.

10. இச்சிறுகதைப் போட்டி சம்பந்தமாக எவ்விதமான கடிதப்போக்குவரத்தும் வைத்துக் கொள்ள இயலாது.

**ஸ்ரீகயிலைக் குருமணி நினைவுச் சிறு கதைப் போட்டியில் தமிழ் எழுத்தாளர்கள் எவ்வித பேதமுமின்றி, ஆண் பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்.**

**ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆணையின்வண்ணம்**

ஆசிரியர், ஞானசம்பந்தம் - தருமையாதீனத் திங்கள் இதழ்,
ஞானசம்பந்தம் அலுவலகம், தருமபுரம்,
மயிலாடுதுறை 609 001, தஞ்சை மாவட்டம்.

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 43 | இரக்தாக்ஷி – புரட்டாசி – 10—10—84 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கோயில் நல்வாழ்வின் வாயில்

### கோயில் இறைவன் இல்லம் :

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது கோட்பாடாகத் தமிழகத்தில் திகழ்வதொன்றாகும். தமிழகம், கோயில்கள் நிறைந்த தனிச்சிறப்பு வாய்ந்த ஒருநாடாகும். தமிழ்நாட்டுப் பகுதியில் கோயில்கள் மிகுந்திருப்பதுபோல மேதினியில் எங்கும் காண்பது அரிது. மதுரை, தஞ்சை, திருவண்ணாமலை, திருவானைக்கா போன்ற கோபுரச் சிறப்புமிக்க கோயில்களைத் தமிழகத்தில் அன்றித் தரணியில் எங்கும் காண முடியாது என்பது எவரும் ஒப்பும் உண்மையாகும்.

"கோயில்" என்ற பதத்திற்கு, நமக்கு எல்லாம் நாயகனாகிய – கோவாகிய இறைவனது இல்லம் எனப்பொருள்படும். கோயிலில் இருப்பது வெறும் கற்பதுமை அன்று. எங்கே அன்பும், பக்தியும், சிரத்தையும் கொண்டு அன்பர்கள் உருகி உருகிப்பணிந்து உளமார வணங்கிப் போற்றி இறைவனைத் துதிக்கிறார்களோ, அங்கே ஆண்டவன் அருள் வடிவோடு எழுந்தருளி ஆதரித்துக் காத்து இரட்சிக்க முன்வருவான்.

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமான் எங்கெல்லாம் எழுந்தருளுவார் என்பதுபற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. " ஆர்வலர் ஏத்த மேவருநிலையினும் " என்ற அடியிலே அன்போடு பக்தர்கள் மேவி வழிபடும் இடமெல்லாம் முருகப்பெருமான் தோன்றுவார் என்பது விளக்கப்படுகிறது. எனவே கோயில் கட்டிக் குடமுழுக்குச்செய்யப்பட்ட இடத்தில் இறைவன் இயல்பாக எழுந்தருளுவான் என்பது தெளிவு.

## கோயில் செல்லும் பழக்கம் :

திருக்கோயில் உள்ள ஊர் தெய்வம் உள்ள ஊர். திருக்கோயில் இல்லாத ஊர் தெய்வம் இல்லாத ஊர். " திருக்கோயில் இல்லாத திருஇல் ஊரும் " என்பது அப்பரது திருவாக்கு ஆகும். ஆகவே அடிக்கடி நாம் திருக்கோயில் செல்லுவது அவசியம். இறைவனை மனம் உருகி நின்று தினம் பணிவதால் நமது துன்பங்கள் பகலவன் முன் பனிபோல் நீங்கி மறையும். கோயிலுக்கு அனுதினமும் சென்று பணிவதால் குறைகள் நீங்கும்; மனம் சாந்தியுறும்; நெஞ்சம் தெளிவடையும்; வாழ்வு முன்னேற்றம் கொள்ளும்.

மனதிற்கும் தேக ஆரோக்கியத்திற்கும் சம்பந்தம் நிறைய உண்டு. ஆரோக்கியமான மனநிலை இருந்தால் ஆரோக்கியமாக உடம்பும் இருக்கும். இதை ஆங்கிலத்தில் Psycho – Physio – logical reaction என்பார்கள். அமைதியற்ற மனம் வாய்க்குமானால் உடம்பு பாதிக்கப்படும் – குழப்பநிலை ஏற்படும் – புத்தி தெளிவு மறையும். மனிதனது வாழ்நாளும்கூடக் குறைந்து போகும். கோயிலுக்குச்சென்று குறைஇரந்துவழிபாடு புரிவதால் அமைதி மனம் அடையப்பெறும். அதனால் ஆரோக்கியம் இயல்பாக அமையும். மருத்துவர்களால் தீர்க்க முடியாத நோய்கள் மகாதேவன் அருளினாலே தீர்ந்து ஆரோக்கியம் அடையப்பெறுகிறது. அப்பர் சுவாமிகளின் சூலைநோய் ஆண்டவன் அருளால் தீர்ந்தது. சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன் அருளாலே இருகண் பார்வையும் மீண்டும் பெறப் பட்டதைப் பெரியபுராணம் பேசுகிறது.

## விஞ்ஞானிகள் கூற்று :

அலெக்ஸஸ் கேரல் என்ற பிரஞ்சு நாட்டு மருத்துவமேதை தம் அனுபவத்தை அழகாக எடுத்தோதுகிறார்.

" பிரார்த்தனை என்பது பூமியின் ஈர்ப்புநிலை போன்ற ஒரு சக்தி ஆகும். நான்ஒருமருத்துவன்என்றநிலையில்ஓர்உண்மையை உணர்ந்திருக்கிறேன். பல மனிதர்களை நான் கண்ணாரக் கண்டு

மிருக்கிறேன் – எல்லாவிதமான மருத்துவமுறைகளும் தோல்வி யுற்ற பிறகு பிரார்த்தனையின் உன்னதமான முயற்சியால் அவர் கள் நோயிலிருந்தும் துயரத்திலிருந்தும் காக்கப்பட்டுள்ளதைக் கண்ணாரக்கண்டிருக்கிறேன். பிரார்த்தனை ஒன்றின் மூலமாகத் தான் முழுமையான ஒருமைப்பட்ட முறையில் உடலும் மனமும், உயிரும் இணைப்புக்கொள்கின்றன. அதன் மூலமாக அற்பமான மானுடம் அசைக்க முடியாத சக்தியைப் பெறுகின்றது." ( அலெக்ஸஸ் கேரல் )

மெலஞ்டன் என்ற மேதை பேசுவார்; " துயரமும் தொல்லை யும் என்னைப்பிரார்த்தனைக்குத் துரத்தின. பிரார்த்தனை தொல்லை யையும் துயரத்தையும் துரத்திவிட்டது " எனித் துல்லிய முறையிலே பேசுகிருர்.

" தொழுது வழிபடும் அடியர் காவற்காரப் பெருமானே" என அறுமுகர்பக்தர் அருணகிரிநாதர் அருள்கிருர்.

மழுவாள்வலன் ஏந்தீ! மறை யோதீ! மங்கைபங்கா!
**தொழுவார்அவர் துயராயின் தீர்த்தல்உன தொழிலே!**
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
[ அருள்துறையுள்
அழகா! உனக் காளாய் இனி அல்லேன் எனலாமே!

**— சுந்தரமூர்த்தி நாயனர்**

காலைநன் மாமலர் கொண்டு அடிபரவிக்
கைதொழு மாணியைக் **கறுத்த வெம்காலன்**
**ஓலமதிடமுன் உயிரொடுமாள**
**உதைத்தவன்** உமையவள் விருப்பன் எம்பெருமான்
மாலைவந்து அணுக ஓதம்வந் துலவி
மறிதிரை சங்கொடு பவளமுன் உந்தி
வேலைவந்தணையும் சோலைகள் சூழ்ந்த
வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே !

**— திருஞானசம்பந்த சுவாமிகள்**

**ஒரு கேள்வி :**

சிலர் கேட்கக்கூடும். கோயிலுக்குப் போனல்தான் கடவுள் அருள் கிட்டுமா ? வீட்டிலே இருந்தவாறு இறைவனை வழி பட்டால் – துதித்து வணங்கினல் இறைவன் அருளமாட்டான ? கோயில், இறைவனை இதயம்கலந்து வணங்கத்தக்க சூழலைத் தந்துஉதவுகிறது. பலநூற்றுண்டுக்காலமாகப்பலரும்வணங்கித் துதித்ததால் தெய்விக அலைகள் (divine vibration) அங்குத் திகழ்கின்றன. முறையாக நிறுவிக் குடமுழுக்குச் செய்யப்பட்ட

ஆலயத்தில் முழுதுமாகத் தெய்விகச்சூழல் நிலவுகிறது. அபிஷேக ஆராதனைகள் மூலமாகவும் மந்திரங்களால் செய்யப்படும் அர்ச்சனைகளாலும் பல்வகையான வழிபாடுகளாலும் கோயிலிலுள்ள விக்கிரகங்கள் சக்தியை மென் மேலும் தேக்கி வைத்துள்ளன. குறிப்பாகப் பாடல் பெற்ற திருக்கோயில்கள் அளவற்ற அருட்சூழலை வழங்குகின்றன. அருளாளர்கள் தோத்திரங்கள் அங்கே அருள்வெள்ளத்தை நிரப்பி வைத்திருக்கின்றன. ஸி. டபுள்யூ லெட்பீட்டர் என்னும்தத்துவவிற்பன்னர் "சிறந்த கோயில்‌என்றால் அதைச்சுற்றி ஐந்து மைல் வட்டாரத்துக்குத் தெய்விக அலைகள் வீசிக்கொண்டிருக்கும்" என்கிறார். பெரிய ஞானிகளுக்கும் சித்தர்களுக்கும் முனிவர்களுக்கும் கூடக் கோயில் வேண்டற்பாலதேயாகும். மக்கள் சேவையில் அக்கரையுடையோர், மக்கள் முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்டோர், சமயத்தலைமை பூண்டிருக்கும் சான்றோர்கள் – இவர்கள் எல்லாம் இறைவழிபாட்டுக்குக் கோயிலை நாடி வருவதை நாம் நடைமுறையில் பார்க்கிறோம்.

நம் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தங்களது ஆன்மார்த்த மூர்த்தியான செந்தமிழ்ச் சொக்கநாதர் பூஜையையும், திருக்கோயில் வழிபாட்டினையும் ஒருநாளும் தவறாது இடைவிடாது நிகழ்த்தி வருவது மக்கள்யாவரும் பின்பற்றத் தக்க மார்க்கமாகத் திகழ்கிறது.

**மக்கள் கடமை :**

கோயில்களை மக்கள் குதூகலத்தோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவைகள் நல்லமுறையில் பராமரித்து அழகுபட வைத்துக்கொள்ள மக்கள் முன்வந்து உதவ வேண்டும். ஒவ்வொரு கோயிலிலும் அவ்வவற்றிற்கும் உரிய திருவிழாக்கள் தவறாது நடைபெற மக்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கவேண்டும். அரசாங்கமும் ஆலயங்களில் காலா காலத்தில் முறையாக வழிபாடுகள் நடைபெற, திருவிழாக்கள் சிறப்பாக நடந்து மக்கள் பயன்பெறச் செய்ய ஆவன புரிய வேண்டும். ஆலயங்களில் அமைந்திருக்கும் தெய்வங்களுக்குப் பிரீதி ஏற்படவில்லை என்றால், பின்னர் தெய்வ நல்லருளால் ஏற்படும் நலன்கள் நமக்குக் கிட்டா. காலத்தில் மழைபெய்தல் இயற்கைச் சீற்றம் இல்லாது எவையும் இயல்பாக நடைபெறல் போன்றவை தெய்வம் அமைத்துத்தரும் சூழ்நிலைகள் ஆகும். தங்கள் வாக்கால் தலைமைபெற்று ஆட்சி செய்யும் அரசியல் வாதிகளை மக்கள் தாம் கோயில் காரியங்களைக் குறைவின்றிச்

செய்யத் தூண்டவேண்டும் வற்புறுத்தவேண்டும். கோயில் வருவாய் கோயில்களுக்கே என்ற கோட்பாட்டை நடைமுறைப் படுத்த வேண்டும். கோயில் சொத்தில் கைவைத்தல் கூடாது என்ற கொள்கையைப் பின்பற்றச்செய்யவேண்டும்.

## அருளாளர் செயல் :

அருளாளர்கள், யாவும் ஆண்டவன் செயலே என்ற அற நெஞ்சம் கொண்டவர்கள். அவர்கள் இறைவனை நோக்கிக் கோரிக்கை விடுவரே அன்றி எவரையும் குறைகூறமாட்டார்கள். அருளாளர்கள் கோரிக்கையை ஆண்டவன் நிச்சயம் செவி சாய்த்துக் கேட்டுச் செய்யவேண்டியவற்றைச் செய்வார் என்பது உறுதி. "நன்றே செய்வாய் பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே!" என மணிவாசகர் கூறியதுபோல் மாதவச் செல்வர்கள் இறைவன் இதயம் போல் நிகழ்வன யாவையும் ஏற்று அமைந்திருப்பரே அன்றி அவலப்பட்டு அல்லலுறார் என்பது உறுதி.

## இறைவனை நம்புவோம் :

நம்பிக்கையே சமயங்களின் நாடித்துடிப்பாகும். சமயத்திற்கு ஆங்கிலத்திலே நம்பிக்கை (faith) என்ற பெயர் உண்டு. நம்பிக்கை இல்லாதவர்கட்கு நாளும் சமயவாழ்வு கிடையாது. நம்பிச் செயல்பட்டால்தான் நாம் சமய வாழ்வில் பயன் அடையமுடியும்.

கோயில்களை நல்லமுறையில் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நமிநந்தி அடிகள், குங்குலியக்கலய நாயனார் திருநாவுக்கரசு நாயனார் போன்ற அடியார்கள் கோயில் சேவையிலும் வழிபாட்டிலும் செம்மையான பலனைக் கண்டவர்கள்.

நல்வாழ்வு காணக் கோயில் வழிபாடு நல்ல மார்க்கமாகும். கோயில்களில் நல்லமுறையில் வழிபாடு நிகழ்த்தல் கூட்டு வழிபாடு, வாரவழிபாடு திருமுறைகள் ஓதல், ஓதுவித்தல் இவற்றின் மூலம் நல்வாழ்வையும் மன அமைதியையும் ஆரோக்கியத்தையும் அடையமுடியும். கோயில் நமது நல்வாழ்வின் வாயில் என்பதில் ஐயமில்லை.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று."

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மற்றல் அரிது."

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சமயபுரத்தில்

**தமிழக அரசு, ஆலய மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஏழுகோடிரூபாய் நிலைநிதி வழங்கும் விழாவில் அருளிய**

# ஆசியுரை

15—8—1984

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுல கெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா ! இப்பொருளறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

**சுப சூசகம் :**

நமது நாடு சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் ஆகின்றன. 37 சுதந்திர தினத்திலும் இல்லாத தனிச்சிறப்பு இந்த 38 ஆம் ஆண்டில் நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நல்வாய்ப்பை ஆட்சியாளர்கட்கு உள்நின்று உணர்த்திய பரமேசுவரனுக்கு முதலிலே நன்றிமிக்கவணக்கத்தைத்தெரிவித்துக்கொள்வோம். அதனைச் செயற்படுத்துகிற பொன்மனச் செம்மல் மாண்புமிகு எம். ஜி. ஆர் அவர்களையும் அவர் தூதராக இருந்துஇயக்குகின்ற மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களையும் அரங்கராஜனை இங்கே வீற்றிருக்கின்ற மாண்புமிகு சௌந்திரராஜன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

38 என்ற எண், எண் கணிதப்படி 3 + 8 = 11 என்று ஆகும். 11 - ஐ சோதிடத்திலே லாபஸ்தானம் என்று குறிப்பிடுவார்கள். 38 ஆவது ஆண்டு முதல் அறநிலையங்களெல்லாம் வளமாகத் திகழும் என்றும், அதன் வழி நாடும் செழிப்படைந்து நானில மக்கள் நலமுறுவார்கள் என்றும், சுபசூசகமாகக் கொள்ளலாம்.

## எண்ணம் போல் வாழ்வு :

நம் எண்ணம் செம்மையாக இருக்குமானல் நம்முடைய வாழ்வும் செம்மையாக இருக்கும். நம் சொல் சுத்தமாக இருக்குமானல் நம்முடைய வாழ்வும் சுத்தமாக இருக்கும். நம்முடைய செயல் தூய்மையாக இருக்குமானல் வாழ்வும் தூய்மையாக, வளமுடையதாக, பெருமைப்படத்தக்கதாக இருக்கும். எனவே மனம், மொழி, மெய் இந்த மூன்றும் நல்லனவே செய்யுமானல், நம்மை யாரும் கெடுத்துவிட முடியாது. இதனை எல்லாம் நன்குணர்ந்தே ஆட்சியாளர்கள் 'சத்திய மேவஜயதே' – 'வாய்மையே வெல்லும்' என்று அரசு இலச்சினையில் பொறித்து வைத்து இருக்கிருர்கள். அந்த வாய்மையே வெல்லும் என்பதை நிலைநாட்டும் வகையிலேயே ஆட்சியாளர்கள் வசதியுள்ள அறநிலையங்களின் உபரிநிதியிலிருந்து ஆலய மேம்பாட்டுத் திட்டத்திற்கென இன்று 7 கோடிருபாயை முதலீடாகத் தருவதற்கு முன்வந்துள்ளனர்.

## எழு கோடி :

7 கோடி என்றவுடன் நம்முடைய சமயத் தொடர்பான ஒரு கருத்து நினைவுக்குவருகிறது. நம்முடைய சமயத்தில் எழுகோடி மந்திரங்களைச் சப்தகோடி மகாமந்திரங்கள் என்று சொல்லுவது வழக்கம். 'சப்த கோடி மந்தரங்கள்' என்ருல் 7 கோடிமந்திரங்கள் என்று எண்ணுப்பெயரில் பொருள் கொள்ளக் கூடாது. கோடி என்ருல் முடிவு என்றும் பொருள் உண்டு. இன்றும்கூட வழக்கத்தில், "கோடி வீட்டு ஐயாவைக் கூப்பிடு" என்று கூறுவதைக் காணலாம். தெருமுடிவிலே இருக்கும் வீட்டினைக் 'கோடி வீடு' என்று கூறுவது போல 7 கோடி மந்திரங்கள் என்பதற்கு ஏழு முடிபுகளைத் கொண்ட மந்திரங்கள் என்பது பொருள். "நமஹ" "சுவாஹ: சுவதா; வவ்ஷட்; ஷவட், 'பட்' 'ஹும் பட்' என்று வரும் அம்முடிபுகளையே ஏழுகோடி என்று கூறியுள்ளனர். இவை அனைத்தும் பொருளுடைய சொற்கள். மந்திரங்கள் 7 கோடி என்பதுபோலத் திருக்கோயில் மேம்பாட்டுநல நிதியினையும்–ஏழுகோடி என்று அமைத்திருக்கின்ருர்கள்; திருவருள்தான் அங்ஙனம் அமைத்திருக்கிறது. திருவருள் வழியே ஆட்சிநடைபெறுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

## பன்னிரு கோடி :

இங்கு முதலாம் இராஜராஜனைப்பற்றிப்பலரும் பேசினர்கள். திருமுறைகளைக் கண்டு பிடித்து அதனை ஒழுங்குபடுத்தியவன்

அவன்தான். நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு திருமுறைகளை முதலில்வகைப்படுத்திஏழு திருமுறைகளாகத்தொகுத்தவன் அவன். மந்திரங்கள் 7 கோடி என்பதனைல்தான் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாசுரங்களை, மந்திரங்களாகப் போற்றி ஏழு திருமுறைகளாகத் தொகுத்தான். எனவே "ஏழு கோடி நிதி" என்னும் இத்தொகை திருவருள் வாய்ப்பாகப் பல்வகையிலும் பொருத்தமாக அமைந்திருக்கிறது மேலும் இராசராசன் தொகுத்த ஏழு திருமுறைகள் பின்னர் பன்னிரு திருமுறைகளாக வளர்ந்து நிறைந்தன. அதே போல் இந்நிதியும் பன்னிரு கோடியாக வளர்ந்து நிறைவதாகுக.

## அருளும் பொருளும் :

இங்கே அருள் நலம் காணும் அருளாளர்களும் பொருள் நலம் காணும் ஆட்சியாளர்களும் அமர்ந்துள்ளார்கள். அருள் கண்ணுக்குத் தெரியாது; பொருள் கண்ணுக்குத் தெரியும். தெரிந்த ஒன்றைக் கொண்டுதான் தெரியாததைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். தொலைவில் புகை எழுவது நமது கண்ணுக்குத் தெரிகிறது; ஆனல் நெருப்பு கண்ணுக்குத் தெரியாது. அந்தப் புகையைக் கொண்டு நெருப்பைப் புரிந்து கொள்கின்ருேம். அதுபோலவே பொருளைக் கொண்டுதான் மறைந்திருக்கும் அருளைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் புரிந்துகொள்ள வில்லை என்ருலும் அது நம்மை விட்டுப்பிரிந்து விடாது. என்றைக்கும் அவ்வருள் நம்முடனேயே இருப்பது தான்.

## பொருளின் ஆதாரசுருதி :

அருள் என்பது, அன்பு என்னும் தாய் ஈன்ற குழந்தை என்பார் திருவள்ளுவர். "அருளென்னும் அன்புஈன் குழவி" என்பது குறள். அக்குழந்தை எந்தச் செவிலியால் ,வளர்கிறது எனின், பொருள் என்னும் செல்வச் செவிலியால் வளர்கிறது என்றும் வள்ளுவர் கூறுகின்ருர்.

> " அருளென்னும் அன்பு ஈன் குழவி பொருளென்னும்
> செல்வச் செவிலியால் உண்டு."

என்பது அக்குறள். எனவே அருளும் பொருளும் ஒன்ருேடு ஒன்று தொடர்புடையன என்பதை உணரலாம். பொருளுக்கு ஆதார சுருதியாக இருப்பது அருள். கண்ணுக்குத் தெரியாத அருளும் கண்ணுக்குப் புலப்படும் பொருளும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பன என்பதற்கு ஓர் உதாரணத்தைக் காணலாம்.

**உள்ளும் புறமும் :**

நம்முடைய உடம்பிலே உயிர் இருக்கிறது. அது கண்ணுக்குத்தெரியாது. கை, கால்களின் அசைவினாலேதான் உயிர் இருக்கிறது என்பதை உணர்கின்றோம். மூளை இருக்கிறது- அது நம் கண்ணுக்குத் தெரியாது; இருதயம் இருக்கிறது - அது நம் கண்ணுக்குத் தெரிகிறதா?- அதுவும் தெரியவில்லை; ஈரல் இருக்கிறது - அதுவும் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இவை அனைத்தும் உள்ளே இருந்து அதனதன் வேலையை ஒழுங்காகச் செய்துகொண்டிருக்கின்றன. உட்கருவிகள் எல்லாம் சரியாக இயங்கினால்தான் புறத்திலே உள்ள கை கால்கள் எல்லாம் சரியாக வேலை செய்யும். இதேபோல உள்ளே இருக்கின்ற உயிர், மூளை, இருதயம், ஈரல் போன்றவை எதனாலே இருக்கின்றன? புறத்தே தெரிகின்ற கை கால்கள் எல்லாம் சரியாக வேலை செய்து உணவை உள்ளே செலுத்தினால்தான் ஈரல் அதனை ஏற்றுச் சத்துப் பொருளை இரத்தமாக்கி இருதயத்திற்கு அனுப்ப முடியும்; இருதயம் அழுத்தம் கொடுத்து அந்த இரத்தத்தை மூளைக்கும் பிற இடங்களுக்கும் அனுப்புகிறது. அவ்வழியே மூளையும் பிற உள் உறுப்புக்களும் இயங்குகின்றன இதனால் உயிரும் நிலை பெறுகிறது

ஆகவே உள் உறுப்புக்களுக்குப் புற உறுப்புக்களும் புற உறுப்புக்களுக்கு உள் உறுப்புக்களும் எங்ஙனம் ஆதாரங்களாக உள்ளனவோ அங்ஙனமே அருளும் பொருளும் ஒன்றை ஒன்று சார்ந்து நிற்கின்றன என்பதை உணரலாம். இரண்டும் நாட்டின் இருகண்கள் எனவே அருள்நிலைக்க வேண்டுமானால் பொருள் நல்ல முறையிலே ஆட்சி செய்ய வேண்டும் அதனால் தான் வள்ளுவர்,

> " அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
> நின்றது மன்னவன் கோல் "

என்று கூறுகின்றார். 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' என்று கூறுகிறது புறநானூறும்.

**பொருளின் தேவை :**

அருளாளர்களாகிய முனிவர்கள் எண்ணுவதும் பொருளாளர்களாகிய ஆட்சியாளர்கள் கருதுவதும் பொன்னால் முடியும் என்று மணிவாசகரும்பொருளின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார் "முனிவரும் மன்னரும் உன்னுவ பொன்னால் முடியும்" என்பது அவ்வருளாளரின் வாக்கு.

## கடவுளுக்கு அமைந்த கற்றளி :

இக்கருத்துக்களை எல்லாம் உளங்கொண்ட சான்றோர்களும், மன்னு உலகத்து மன்னுதல் குறித்த மன்னர்களும் அருள் நிலையங்களுக்கு நிலையான பொருளை வைத்துதவினர்கள். அவர்கள், நில்லா உலகத்து நிலையுடையதைச் செய்திருக்கின்றார்கள். நிலையான கோயிலையும் கட்டிவைத்தார்கள்.

நிலையான இறைவனை எழுந்தருளச் செய்ய ஒரு குடிசை போடலாம். அல்லதுசாதாரண செங்கற்களால்சுடுமண்கோயில் கட்டலாம். அதனை எல்லாம் விடுத்துக் கருங்கற்களால் திருக்கோயில்களையும் திருமடங்களையும்கட்டியுள்ளார்கள். இங்ஙனம் கருங்கற்களால் கோயில்கட்டும் புண்ணியப்பணியின் பயனைக் குறித்து ஒருபழம் பாடல் விளக்கம் கூறுகிறது புல்லினால் இறைவனுக்குக் கோயில் கட்டினால் 5 கோடி வருடம் அவர்கள் கயிலாயத்தை விட்டு நீங்காதிருப்பார்கள்; புதுமண்ணால் கோயில் கட்டுவோர் 10 கோடி ஆண்டு கயிலாயத்தைவிட்டு நீங்காதிருப்பார்கள்; செங்கல்லால் கோயில்கட்டுவோர் நூறு கோடி வருடம் நீங்காதிருப்பார்கள். கல்லினால் கோயில் கட்டுவோர் கயிலை விட்டு என்றும் அகலாதிருப்பார்கள் என்று அப்பாடல் கூறுகிறது.

" புல்லினால் ஐந்துகோடி புதுமண்ணால் பத்துகோடி
செல்லுமா ஞாலம்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லியங் குழலாய்கேளாய் ஆலயம்மடம் நமக்குக்
கல்லினால் கட்டினோர்கள் கயிலைவிட் டகலார்தாமே "

எனவே தான் இறைவன் எழுந்தருளியுள்ள திருக்கோயிலையும் இறையருள் பெற்ற அருளாளர்கள் தங்கிவாழும் திருமடங்களையும் நம்முன்னோர்கள் கல்லினால் கட்டினார்கள். இன்றுகூட, மக்கள், தங்களுக்கு வீடுகட்டும்போது கல்லினால் கட்டுவது கிடையாது. திருக்கோயில் எனின் கல்லினால் கட்டுகிறார்கள்.

## நிலங்களைக் கொடுத்த நீர்மை ;

இங்ஙனம் திருக்கோயிலையும் திருமடங்களையும் கல்லினால் கட்டிவைத்தால் மட்டும் போதுமா? அவற்றிற்கு நிலையான சொத்துக்களையும் முன்னோர்கள் எழுதிவைக்க விரும்பினார்கள். அந்த நிலையான சொத்து எது? தாவரம் என்பது அசையாதது; சங்கமம் என்பது அசைவது. புடை பெயர்ச்சி உடையது. அதனாலே தான் நிலையாக உள்ள நிலங்களைக் குடிமக்களும்

மன்னர்களும் அறநிலையங்களுக்குச் சொத்துக்களாக எழுதி வைத்தனர். அத்துடன் விட்டு விட்டார்களா? அந்த நிலையான நிலத்திற்கு ஏதேனும் இடையூறு வந்தாலும் காத்தார்கள். அதற்கு ஒருவரலாற்று உதாரணம் உண்டு.

## வரலாறு கூறும் வளமான உண்மை:

முதலாம் இராசராச சோழனின் மகன் முதலாம் இராசேந்திர சோழன். அவன் சிறந்த சிவபக்தன் கங்கைகொண்ட சோழ புரத்தை அமைத்து அங்கே தஞ்சைக் கோயிலைப்போல் ஒரு திருக்கோயிலையும கட்டியவன். அவனுக்குப்பல மனைவிமார்கள் உண்டு. அவர்களில் 2 மனைவியுடன் இராசேந்திர சோழன், ஒருமுறை தீக்காலிவல்லம் என்று கல்வெட்டிலே குறிக்கப்படு கின்ற திருவல்லம் என்னும் ஊருக்குப் போயிருந்தான். அவன் மனைவியர் இருவர் அருகில் உள்ள பெருமாள் கோயிலுக்குக் கொஞ்சம் நிலங்களைச் சாசனம் செய்துகொடுத்தார்கள். திரு வல்லம் என்னும் ஊர் வேலூருக்கு அருகாமையில் உள்ளது. இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து அப்பெண்மணிகள் மீண் டும் அவ்வூருக்குச்சென்றார்கள். அவ்வமயம்தாங்கள் கொடுத்த நிலங்களிலிருந்து சரியாக விளைச்சல் வருகிறதா? அவ் வருமானம் கோயிலுக்குப் போதுமானதாயுள்ளதா? அவ்வருமா னத்தில் பூஜைகள் சரிவர நடைபெறுகின்றனவா? என்று அறிய ஆவல்கொண்டு விசாரித்தார்கள். அங்கே நிர்வாகம் செய்துகொண்டிருந்தவர், "ஒருவருடம் விளைந்தது; பிறகு சரிவர விளையவில்லை; கால்வாயும் தூர்ந்து போய்விட்டது; மழையும் சரிவரப் பெய்யவில்லை; அதனாலே பூசையும் முறை யாக நிகழவில்லை" என்று கூறினர். உடனே அந்த அரசியர் இருவரும் விறுவிறுப்பாக மன்னனைக் காணவந்தார்கள். மன்னன் அப்பொழுது கோயிலிலே இருந்தான். "சரி! வீட்டிற்கு வரட்டும்" என்று காத்திராமல் கோயிலுக்கே சென்று விவரங்களைச் சொன்னார்கள். அவ்வமயம் அரசன் தேவாரம் ஓதிக் கொண்டிருந்தான், என்று கல்வெட்டுக் கூறுகிறது. உடனே, அரசன், பூசைக்குத் தேவையான பொருள்களைக் கொடுத்துக் கால்வாய்களைச் சீர்செய்யவும் ஆணைபிறப்பித்தான் என்று அது கூறுகிறது. இது அந்தக் காலத்து ஆட்சியாளர் களும் அவர்களின் மனைவிமார்களும் அறநிலையங்களின் மீது எவ்வளவு பற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதைக்காட்டுகிறது. இத்தகைய அறப்பற்று இடையிலே சிறிது மறைந்திருந்தாலும் இவர்களின் காலத்திலே மீண்டும் அது புதுப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இன்றைய விழா நமக்குணர்த்திக் கொண்டிருக்கிறது.

**வேற்றவர் ஆட்சி :**

நம்மவர்கள்மட்டுமல்லாது வேற்றவர்களாகிய ஆங்கிலேயர்களும் நற்காரியங்கள் பலவும் அறநிலையங்களுக்குச் செய்துள்ளார்கள். ஆங்கிலேயர்கள் நம்மை நேரிடையாக ஆட்சி செய்தது 130 ஆண்டுகள். 1818-ம் ஆண்டு முதல் 1947-ம் ஆண்டு வரை அவர்கள் நம்மை ஆண்டு கொண்டிருந்தார்கள். 1818-ஆம் ஆண்டிற்கு முன்பு 'கம்பெனியார் ஆட்சி' என்று ஒருவித ஆளும்முறை இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தேயும் அறநிலையங்களுக்கு உள்ள நிலங்களிலிருந்து சரிவர வருமானம் வரவில்லையானால் அப்பொழுது பொருள் கொடுத்து உதவியுள்ளார்கள். அறநிலையங்களின் நிலத்தை எடுத்துக் கொண்டால் அதற்கு "மோகினித்தொகை" தஸ்திக் அலவன்ஸ் என்பன போன்ற பெயர்களில் ஈட்டுத்தொகை வழங்கிவந்தார்கள்.

**கடமையே அறம் :**

இத்தகைய வரலாற்று அமைப்பில் இன்றுள்ள ஆட்சியாளர்கள் அறநிலையங்களைப் பாதுகாக்கும் நல்லநோக்கில் இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இது முதலுதவி சிகிச்சை போன்றதேயாகும். நிலையான இறைவர்க்கு நிலையான தாவர சொத்துக்களைத் திருக்கோயில்களுக்கு நிலைக்கச்செய்வதே நிலையான அறமாகும். அதனையும் விரைவில் இந்த அரசு செய்வதாக உள்ளது என்பதை அறிந்து மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகிறோம். இது, இவர்களுக்கும், இவர்கள் வாழும் இந்த நாட்டிற்கும் சமயத்திற்கும் செய்யும் நற்றொண்டாகும். நல்ல காரியங்களே அவர்களைக் காப்பாற்றும். தருமத்தை ஆட்சியாளர்கள் காத்தால் அந்தத் தர்மமே அவர்களைக் காப்பாற்றும்.

அவ்வகையில் இன்றைய ஆட்சியாளர்கள் தங்களின் கடமையை உணர்ந்து செயல்பட்டுச் சிறப்புறுகின்றனர். குறிப்பாக இன்றைய தமிழக அரசின் முதல்வர் அவர்களுக்கும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் இவ்வகையில் நாடு கடமைப்பட்டுள்ளது.

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோல்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநிதி விளங்குக உலகமெல்லாம்.

— கந்தபுராணம்.

# சித்தாந்த சைவமும் வீர சைவமும்

**மேதகு B. D. ஜாட்டி அவர்கள்**

[ அனைத்துலக சைவ சித்தாந்த கருத்தரங்கு 1984 மே 11, 12, 13 ஆகிய தேதிகளில் தருமை யாதீனம் திருநெறியத் தமிழ் மன்றத்தில் நிகழ்ந்த போது முன்னாள் துணை ஜனாதிபதி மேதகு. B. D. ஜாட்டி அவர்கள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்து அரியதொரு சொற்பொழிவு ஆற்றினார்கள். அவரது ஆங்கிலச் சொற்பொழிவு தமிழாக்கம் செய்யப்பட்டு இப்பகுதியில் வழங்கப்படுகிறது. தமிழாக்கம் – 'செந்தில் குமரன்.' ]

பிரபஞ்சத்தின் இறுதியான உண்மை பற்றி மனிதன் கொண்ட நாட்டம், நாகரீக – கலாச்சார வரலாற்றிலே ஒரு முக்கிய திருப்புமுனை ஆகும். அது மேற்கத்திய நாடுகள் ஆகட்டும், அல்லது கீழை நாடுகளாகட்டும், இந்த நாட்டம் இடையறாது நடந்து கொண்டிருக்கிறது; அவைகள் மாறுபட்ட நிலையிலிருக்கக் காரணம் சூழ்நிலையில் வேறுபாடும், சரித்திர நிலைமைகளில் வேறுபாடும் உண்மையாலே. இவ்விரு வேறுபாடுகளால் தான் ஓர் இனத்தின் அல்லது ஒரு நாட்டின் நாகரிகமும் கலாச்சாரமும் உருப்பெருகின்றன. அரிஸ்டாட்டில் என்ற கிரேக்கத் தத்துவமேதை, தமது "பௌதீகம்" என்ற நூலில் நம்மைச் சூழ்ந்துள்ள பிரபஞ்சத்தின் இயல்பைப் பற்றித் தெரிந்து கொள்ளச்செய்யும் முயற்சியில் பாகுபட்டுக் கோணத்திலிருந்து ( analytical approach ) தொடங்கிறார். இந்தியாவின் உபநிடத ஞானியோ பிரபஞ்சத்தின் உண்மையை அறியும் நாட்டத்தை இணைப்பியல் நோக்கிலே ( synthetic approach ) தொடங்குகிறார். என்றாலும் இருமுறைகளிலேயும் அந்த நாட்டங்கள் ஆன்மீக முக்கியத்துவத்தை மேற்கொண்டுள்ளன; முடிவில் அங்கே அறிவு வேட்கையிலே இரண்டுமே மதிப்பு மிக்கவையாகத் திகழ்கின்றன.

ஃபிளாசஃபி ( Philosopy – தத்துவ ஞானம் ) என்ற சொல் கிரேக்க மொழியிலுள்ள சொல். ஃபைலேன் ( நேசித்தல் )

என்பதிலிருந்தும், ஸோஃபியா (Sophia - அறிவு, ஞானம்) என்ற சொல்லிலிருந்தும் உண்டாயிற்று. அடிப்படையிலே ஏதேனும் ஒன்றைப் பற்றிய பகுத்தறிவு ரீதியான விளக்கம் எனப்பொருள்படும். எல்லா உண்மைகளும் விளக்கப்படும் பொதுவான கோட்பாடுகள் எனவும் பொருள்படும். இத்தன்மையிலே அது விஞ்ஞானம் (Science) போன்றதே. நுட்பத்துறை மரபு ரீதியாக (technically) இதன் பொருள், ஞானம் அல்லது அறிவு பற்றிய ஒரு வேட்கையாகும். இது கோட்பாட்டியல் (Metaphysics), பிரமாண இயல் (Epistemology) தருக்க இயல் (Logic), நீதிஇயல் (Ethics), உருவணி இயல் (Axiology) ஆகியவற்றையும் ஃபிளாசஃபி (தத்துவம்) என்ற சொல் உள் அடக்கி நிற்கிறது. ஆனால் இந்தியாவில் தத்துவம் என்பது சமயத்தோடு இரண்டற இணைந்துள்ளது. இருக்கு வேதகாலத்திலிருந்து சிந்துவெளிப் பள்ளத்தாக்குக் காலம் உட்பட இங்ஙனமே இணைந்திருக்கக் காணலாம்.

இதனை இவ்விதம் சுருக்கமாகக் கூறலாம். தத்துவம் மெய்ப்பொருளுடன் இயன்ற முறையில் இணைப்புறுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தத்துவம், சமயம் - இவ்விரண்டும் கொண்டுள்ள மார்க்கங்கள் இயல்பாக ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. ஆகையால் இந்தியாவைப் பொறுத்த வரையில் தத்துவம் என்பது பெரிய அளவில் சமயச் சால்புகளோடு கலந்து நிற்கின்றது எனலாம். அதைப்போலவே சமயம் என்பது பெரும்பாலும் தத்துவக் கோட்பாடுகளைத் தழுவி நிற்கின்றது. தத்துவமும் சமயமும் இவ்விதமாகக் கொண்டு திகழும் இணைப்பானது இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று பெரிதும் தேவைப்படும் சக்தியையும் நிலையையும்பெறுகின்றன, செல்வாக்கும் வகைநிலையும் நம் சமயம் கொண்டு மிளிர்ந்து வளர இந்நிலை பெரிதும் உதவியுள்ளது எனலாம். எனவே இந்தியாவிலே நாம் இதனால் பல வடிவுள்ள சமயங்களைப் பெற்றதோடு அன்றிப் பலவகைப்பட்ட தத்துவ முறைகளையும் பெற்றுப் பொலிவதைக் காணலாம்.

## சைவசமயத்தின் பழமை

இந்தியாவின் மிகப் பழமையாகிய சமயங்களிலே சைவ சமயம் ஒன்றாகும். மகாபாரதத்தில் சிவபெருமானின் முதன்மை நிலைபற்றிப் புகழ்ந்துபல இடங்களில் குறிப்புகள் இருக்கின்றன. * அதிலே சிவபிரானை ஈசுவரன் என்றும், மகேஸ்வரன் என்றும்

---

* மஹாபாரதம் VIII — 36; X 25; XII — 4498

விஸ்வேஸ்வரன் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் மகாபாரதம் விபூதி பூசியுள்ள வித்தகர்களையும் உருத்திராட்சம் அணிந்த உத்தமர்களையும் விவரமாகத் தெரிவிக்கிறது. பதஞ்சலி முனிவர், உயர்ந்த உலோகங்களால் உண்டாக்கப்பட்ட சிவ ஸ்கந்த விக்கிரகங்களைப் பற்றியும் தெரிவிக்கிறார். மேலும் பதஞ்சலியார் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் சைவப் பெரியார்களைப் போற்றியும் மேற்கோளாகக் காட்டுகிறார். மெகஸ்தனிஸ் என்ற சீன யாத்திரிகர் சிவவழிபாட்டினைப்பற்றிச் சிலாக்கியமாகச் செப்பியுள்ளார். **

ஸ்வெதஸ்வதரா உபநிடதத்திலும் மற்றும் சில உபநிடதங்களிலும் சிவபிரானின் மேன்மை நிலை பற்றி மெச்சி நிறுவப்பட்டுள்ளது. * மேலும் ரிக்வேதத்திலும் ‡ யஜுர் வேதத்திலும் $ அதர்வ வேதத்திலும் சிவனைப்பற்றியசிறப்புப்பேசப்படுகிறது. மொழியியல் (Linguistic Science), ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தது, பல்வேறு தொகுதிகளாக வந்தனர் என விவரிக்கிறது. ஹாரப்பா – மொஹேஞ்சதாரா நாகரீகம் ஆரிய நாகரிகத்திற்கு முந்தியதாகும். சிந்துவெளிப் பள்ளத்தாக்கு நாகரீகமானது மிக மிக உயர்ந்து வளர்ந்து ஓங்கிய ஒன்றாகும். ஹாரப்பா – மொஹேஞ்சதாராவில் செய்யப்பட்ட அகழ்வானது இதைப் பற்றி விளக்கம் தருகின்றது. அகழ்வு மூலமாகப் பெறப்பட்ட பழம் பொருள்கள், அங்கு வாழ்ந்த மக்கள் சைவ சமயத்தைப் பின் பற்றினர் எனக் கொள்ளப்படத் திகழ்கின்றன. ஸர்ஜான் மார்ஷல், ஃபாதர் ஹீராஸ, மெக்னிகால் என்ற மேலை நாட்டு நல்லறிஞர்கள் கூறுகின்றனர். " ஆரியர்கள் குடிபுகு முன்னமே இந்தியாவில் சைவசமயம் நிலவியது " என்கிறார்கள். மேலும் அவர்கள் தெரிவிப்பதாவது: " சைவசமயத்தின் ஆதிக்கம், சிந்து வெளிப் பள்ளதாங்கிலிருந்து வங்காளம் வரை இந்தியா முழுதும் பரவியிருந்தது என்பது மட்டும் அல்ல; அது கடல் கடந்து இந்தியாவுக்கு அப்பால் ஆர்ச்சிபிலாகோவுக்கும் அதற்கு அப்பால் மத்திய ஆசிய மலைகளுக்கு அப்பாலும் விரிந்திருந்தது. " பிரசித்திபெற்ற பெரிய வரலாற்று நூலாசிரியராகிய ஸ்ரீ கே. ஏ. நீலகண்டசாஸ்திரி அவர்கள், சைவசமயம் இந்தியாவிலும் அப்பாலும் பரவியிருந்த சமயமாகவும் திகழ்ந்தது எனச்

---

** Hinduism and Buddhism II pp 137-8 by Elliot
* ஸ்வெதஸ்வரா உபநிஷத் I — 20
‡ ரிக்வேதம் I — 8; I — 16 — 9; — 33
$ யஜுர் வேதம் IV — 5 — 1,
† அதர்வவேதம் IV 28, 8, VI — II

சரியான முறையிலே குறிப்பிடுகின்றார். எனவே சைவசமயம் மிகமிக முற்பட்ட காலத்தைச் சேர்ந்ததும், மிகமிகப் புகழ் பெற்றதுமான சமயங்களில் ஒன்றாகும்.

சைவசமயம் பலவகைப்பட்ட சம்பிரதாய முறைகள் தோன்ற காரணமாக இருந்தது. அவையே பின்னர் தமிழ்நாட்டில் நிலவும் சைவ சித்தாந்தம், கர்நாடகத்தில் உள்ள வீர சைவம், காஷ்மீரத்தில் வழங்கும் சிவாத்வைதம், குஜராத்தில் பின்பற்றப்படும் பாசுபதம், வங்காளத்தில் காணப்படும் சைவம் முதலியனவாகும்.

சைவ சித்தாந்தத்திலும் வீரசைவத்திலும் நிலவும் முக்கிய நெறிமுறைகளைப் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு சுருக்கமாகச் செய்ய இனி முற்படுவேன்.

## சைவ சித்தாந்தத்திற்கும் வீரசைவத்திற்கும் உண்டான மூலங்கள்

எல்லா வகைப்பட்ட சைவசம்பிரதாய முறைகளுக்கும் முக்கிய ஆதார பூர்வமான நூல்கள் சிவாகமங்களே என்று கொள்ளப்படுகின்றது. சிவாகமத்தை அடிப்படையாகக் கொண்ட சம்பிரதாய முறைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப் படுவன அல்ல. அவை முடிவான மெய்ப்பொருளாகிய சிவனை அநுபூதிவாயிலாக அடையச்செய்யப்பட்ட பலவேறு முயற்சிகளையே காட்டுகின்றன.

சைவ சித்தாந்தத்திற்கு முக்கிய மூல சாதனங்கள் இருபத்தெட்டு ஆகமங்களே ஆகும். இருநூற்று இருபத்து ஐந்து உபாகமங்கள், நான்மறைகள், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள், திருமுறைகள் எனக் குறிக்கப்பெறும் தமிழ் மேதைகளின் பக்தி வாக்கியங்கள் முதலியனவாகும். வீர சைவத்தின் முக்கியமூலங்கள், சிவாகமங்கள், உபாகமங்கள், அல்லமபிரபு, பசவன்னர், சன்னபசவன்னர், அக்கமாதேவி போன்ற யோகியரின் வாசகங்கள், சிவாக்கிரயோகி சிவாசாரியரின் நூல்கள், நீலகண்ட சிவாசாரியர், மெக்கையமாயிதேவர், மரிதொண்டதாரியர் மற்றும் பலரின் போதனைகள் – இவைகளே வீரசைவத்தின் மூலசாதனங்கள் ஆகும்.

(தொடரும்)

தருமையாதீனத்தில் நடைபெற்ற
அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கின்
இரண்டாம்நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு,
அருள்மிகு அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கை அம்மனின்
திருக்கோயில் மகாமண்டபத்தைத் திறந்து வைத்துத்
தமிழக அரசு அறநிலையத்துறை அமைச்சர்
மாண்புமிகு. இராம. வீரப்பன் அவர்கள்
வழங்கிய

# பேருரை

வணக்கத்திற்கும் நம்முடைய போற்றுதலுக்கும் உரிய, இந்த வரலாற்றுச்சிறப்புமிக்க கருத்தரங்கத்தை நடத்துவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்ற தருமை ஆதீனகர்த்தர் மகா சந்நிதானம் அவர்களே! வணக்கத்திற்குரிய தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களே! வணக்கத்திற்குரிய திருப்பனந்தாள் காசிமடத்தின் அதிபர் அவர்களே! வணக்கத்திற்குரிய காஞ்சிபுரம் ஆதீனம் மகாசந்நிதானம் அவர்களே! எங்களுடைய பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய முத்தமிழ்க்காவலர் டாக்டர் கி. ஆ. பெ. அவர்களே! அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! இந்த நிகழ்ச்சியில் கருத்துரை வழங்கி அமைந்திருக்கின்ற சான்றோர்களே! கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்திருக்கின்ற அறிஞர் பெருமக்களே! தாய்மார்களே! நண்பர்களே!

தமிழ் நாட்டினுடைய வரலாற்றில் ஒருபுதிய அத்தியாயத்தை இன்றைய தலைமுறை எழுதிக்கொண்டிருக்கிறது. அதனுடைய வெளிப்பாடாக நம்முடைய சமுதாயத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, சமுதாயத்தினுடைய வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது ஆன்மீக உணர்வு என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டிய சமுதாயம் தமிழ்ச் சமுதாயம். ஆகவே அத்தகைய உணர்வுகளை நம்முடைய சமுதாயம் எந்தக்காரணத்தினாலோ எந்தச்சூழ்நிலையின் காரணமாகவோ இடைக்காலத்திலே மறந்துவிட்டோ அல்லது மறுத்துக் கொண்டோ அல்லது புறக்கணிக்கவேண்டும் என்கிற அடிப்படையிலோ நாம் அதைக் கவனிக்காமல் இருந்துவிட்டோம்.

அந்தச் சூழ்நிலையில் இன்றைக்குக் காலம் விட்டிருக்கிற கட்டா யத்தின் காரணமாகவும் சமுதாயத்தினுடைய சுழற்சியில் வந்து சேரவேண்டிய ஒரு காலக்கட்டத்திலே நாம் நின்று கொண் டிருக்கிற காரணத்தாலும் இன்றைக்கு மிகச்சிறந்த காரியங் களில் சான்றோர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ப தற்கு இன்று நடைபெறுகின்ற அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம் ஒரு எடுத்துக்காட்டான நிகழ்ச்சி என்பதை நான் மகிழ்ச்சியோடுதெரிவிக்கக்கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தக் கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கிற ஆற்றல் பெற்றவன் நான் இல்லை என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்திருக்கிறீர்கள். இங்கே வணங்கப்பெறுகின்ற துர்க்கை ஆலயத்திற்கு மகாமண்டபம் ஒன்றை எழுப்பி, அதைத் திறந்து வைக்கின்ற பணியைத் தருமை ஆதீனம் அவர்கள் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். அதைஒட்டி இந்தவளாகத்திற்கு வருகை தரவும் அவர்கள் இருக்கின்ற இந்தச் சந்நிதானத்திலே அவர் களைச் சந்தித்து வணங்கவும் ஒருவாய்ப்பை அவர்கள் எனக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேனே தவிர, இந்த மகாமண்டபத்தைத் திறப்பதற்கு நான் வந்து திறந்தால் தான் திறக்கும் – அல்லது திறக்காதென்பதுமில்லை – அல்லது உலக சைவசித்தாந்தக் கருத்தரங்கத்தில் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்குகின்ற அளவுக்கு ஆற்றல் பெற்றிருக் கின்றேன் என்றும் அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள் என்பதும் எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

நான் அவர்களைத் திருச்சி மலைக்கோட்டையில் நடை பெற்ற குடமுழுக்கு விழாவில் சந்தித்து அவர்களை வணங்கவும் அவர்களின் வாழ்த்துக்களைப்பெறவும் வாய்ப்பைப் பெற்றிருக் கின்றேன். அதற்குப்பிறகு அவர்கள் இருக்கின்ற இந்தவளாகத் திற்கு வந்து பார்க்கின்ற முதல்சந்தர்ப்பம் இது. இதனை எங்கள் அன்பிற்குரிய தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். காரணம் வேறு யாரையும் அப்படிக் குறிப்பிடாத ஒரு சூழ்நிலையில், என்னை, அவர்கள் முதன்முறை யாக வருகின்றேன் என்று எடுத்துச் சொன்னதற்கு ஏதாவது பொருள் இருக்கிறதா? என்பதைக் கூட நான் ஆய்ந்து பார்க் கின்றேன். அப்படிஎன்ன? இந்தஇடத்திற்கு நான்வந்ததினாலே பெருமை சேர்ந்திருக்கின்றது – அது அல்ல – ஆனால் நான் வந்திருக்கின்றேன் என்பது அவர்கள் உள்ளத்தில் ஒரு செய்தி யாக–ஒரு நிகழ்ச்சியாக இடம் பெற்றிருக்கின்றது என்பதை மாத்திரம்என்னாலே புரிந்துகொள்ளமுடிகின்றது. அதனாலேதான் நானும் கடந்த இரண்டு நாட்களாக உடல் நலிவுற்றிருந்த

போதிலும் நேற்று கோவையிலேயிருந்து காலையில் புறப்பட்டு இன்று காலையில் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள 'திருவரம் புரம்' என்னும் ஊரில் சோழர் காலத்தில் எழுப்பப்பெற்ற ஒரு தொன்மையான ஆலயத்திற்கு நடைபெறும் குடமுழுக்கு விழாவில் கலந்துகொண்டு, பகலில், இன்றைக்கு இந்தப்பகுதியிலே புயல்வீசிக்கொண்டிருக்கிற தேர்தல்பிரச்சாரங்களைக் கொஞ்சம் கவனித்து, அதற்குப் பிறகு அவசரம் அவசரமாகப்புறப்பட்டுக் குறிப்பிட்டநேரத்தில் இங்கேவந்து கலந்துகொள்ளவேண்டுமே என்கிற அக்கரையோடு இங்கேவந்து சேர்ந்திருக்கின்றேன். இதனை முடித்ததற்குப் பிறகு இரவோடு இரவாகப் புறப்பட்டு நெல்லை மாவட்டத்திலே நடைபெறுகின்ற கட்டபொம்மன் விழாவிலே கலந்துகொள்ளப் பாஞ்சாலங்குறிச்சிக்குச் செல்ல வேண்டும். அதற்குப்பிறகு அடுத்தநாள் மதுரைக்குச் செல்ல வேண்டும். அங்கு நடைபெறுகின்ற ஆதி பராசக்தி வார வழிபாட்டு மாநாட்டு நிகழ்ச்சியிலே கலந்துகொள்ளவேண்டும். வருகிற வழியிலே ஒருபணியை ஏற்றிருந்தேன். அவசரம் காரணமாக அதனை நிறுத்திவிட்டு வந்தேன். குடந்தையில் 40 ஆண்டுக்காலமாக ஓடாமல் இருந்த சாரங்கபாணி ஆலயத்திற்குரியதேரைவருகிற 21–ஆம்தேதியன்று ஓட்ட இருக்கின்றார்கள். ஒரு 7 அல்லது 8 லட்சம் ரூபாய் செலவு செய்து திருப்பணி செய்யப்பெற்றிருக்கின்ற அந்தத்தேரைஓட்ட இருக்கின்றார்கள். அதனைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று ஒரு திட்டம் இருந்தது. காலம் ஆகிவிட்டது – இங்கே உரிய நேரத்தில் வர வேண்டுமே என்றகவலையோடுநேரேவந்துவிட்டேன். போகும் பொழுது நேரம் இருந்தால் பார்க்கின்றேன்; இல்லையேல் 21–ம் தேதி வந்து கலந்து கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். இதைச்சொல்வதற்குக்காரணம், எங்களைப் போன்றவர்கள்சொல்வதைவிடக்குறிப்பாக,நான், ஒருவிவாதத்திற்குரிய பொருளாகச் சமுதாயத்தில் ஆக்கப்பட்டிருக்கிறவன். இதற்கு முன்பு அறநிலையத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தவர்கள் இவ்வளவு பெரிய விவாதப் பொருளாக ஆக்கப்பட்டிருப்பார்களா?என்பது சந்தேகம். காங்கிரஸ் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள் விவாதத்திற்கு உள்ளாகவேண்டிய அவசியம் இல்லாதவர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களை ஆட்சிப்பொறுப்பில் இந்த சமுதாயம் அமர்த்திய பிறகு டாக்டர் நாவலர் அவர்கள் சிறிதுகாலம் அறநிலையத்துறைப் பொறுப்பைஏற்றிருந்தார்கள். அப்பொழுதுகூடஒருசிறியநிகழ்ச்சி விவாதத்திற்குவந்து அப்படியே அடங்கிப்போய்விட்டது. நம்முடைய துரதிஷ்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் நீண்ட காலம் ஆட்சிப்பொறுப்பில் இல்லாதசூழலில் கலைஞர் கருணாநிதி

அவர்கள் தலைமையில் 7 ஆண்டுக்காலம் ஆட்சி நடந்தது. அப்பொழுதெல்லாம் அந்த அறநிலையத்துறைக்குள்ளே—அந்த அறங்காவலர் குழுவிலே இருந்தவர்கள் எப்படி நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்பதிலே வேண்டுமானால் விவாதங்கள் வந்ததே தவிர அந்த அமைச்சர்களைப்பற்றி விவாதம் வந்ததே இல்லை. நம்முடைய மாண்புமிகு தமிழகத்தின் தளநாயகர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒரு வருடகாலம் அந்த அறநிலையத் துறைப் பொறுப்பைத் தன் பொறுப்பிலே வைத்திருந்தார்கள்; அதாவது முதலமைச்சர் பொறுப்பிலே அது இருந்தது. அதற்குப் பின்னாலே அப்பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்படைக்கப்பட்டதற்குப் பிறகு நான் பல்வேறு ஆலயங்களுக்குச் சென்று, அதிலே கலந்து கொள்ளுகிற — அங்கே நடைபெறுகின்ற அந்த வழிபாட்டு முறைகளிலே ஈடுபடுகின்ற சூழ்நிலைகள் எல்லாம் ஏற்பட்டுவிட்டிருக்கின்ற காரணத்தால், நாங்கள் இதுவரையிலே வெளியிலே இருந்துகொண்டு தெரிந்து கொள்ளாமலே பல பிரச்சனைகளைப் பேசிக் கொண்டிருந்த எங்களுக்குச் சில விவரங்கள் ஆலயங்களுக்குள்ளே சென்ற பிறகுதான் நேரிடையாகத் தெரிந்து கொள்ளுகிற வாய்ப்புக் கிடைத்தது. நான் 'எங்களுக்கு' என்றுசொல்வது ஒருபெரிய இயக்கத்தின் தொண்டன் என்ற முறையில் அந்த இயக்கத்த வரைக் குறிப்பிடுவதற்காக அதனைச் சொல்லுகின்றேன். ஏனெனில் இங்கே பேசிய முத்தமிழ்க் காவலர் அவர்கள் நம்முடைய சமுதாயத்திலே சில உறவுகள் மங்கிப் போயிருக்கின்றனவே; குறைந்து போயிருக்கின்றனவே அதனை ஆராய வேண்டும் என்று அன்போடுகேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் உள்ளத்திலே எழுந்த ஐயப்பாடுகள் சிலவற்றையும் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே அப்படி எல்லாம் நாங்கள் ஒருகாலத்திலே இந்த ஆலயங்களுக்குள்ளே செல்லாமலே அவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும்என்கிறஉணர்வு கூட ஏற்படுத்திக் கொள்ளாமலே—அல்லது தெரிந்து கொள்ளாமலே அவற்றைப் புறக்கணிக்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தைஎங்கள் உள்ளத்தில்பதிய வைத்துக் கொண்டு, பலகருத்துக்களை வெளியில் சொல்லிக் கொண்டிருந்தோம். அந்தக் கூட்டத்தின் சார்பிலே தான் நான், 'நாங்கள்' என்று சொல்லுகின்றேன். இப்பொழுது ஆலயங்களுக் குள்ளே செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் — நிர்வாகத்தின் காரணமாக — ஏற்றுக் கொண்டிருக்கிற கடமை உணர்வின் காரணமாக — செல்லுகிற வாய்ப்பு வந்த பிறகுதான் அந்த ஆலயங்களைப் பற்றிய அடிப்படை அறிவே எங்களுக்குத் தெரிய ஆரம்பித்தது என்பதை நான் இங்கு வெளிப்படையாகவே தெரிவிக்க விரும்புகின்றேன்.

(மேசையைத் தட்டும் ஒலி.)

காரணம் - மனிதன் தன்னுடைய அறியாமையை முதலிலே தான் அறிந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிந்து கொண்டாலே அவன் அறிஞன் ஆகிறான். தன்னுடைய தெரியாமையை - நான் இதுவரை தெரியாமல் இருந்தேன் என்று எடுத்துச் சொல்லுகின்றவன் - கொஞ்சம் திறமையுள்ள - ஆண்மையுள்ளவன் ஆகின்றான். அதைச் சொல்லாததினாலேதான் இவ்வளவு சங்கடங்களும் இவ்வளவு சிக்கல்களும் நடந்து கொண்டிருக்கின்றன. அது ஆன்மீகத்துறையிலேயும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இங்கே நிறை குடங்களாக மிகப் பெரிய ஆதீனங்களைப் பொறுப்பேற்று நடத்திச் செல்லுகின்ற குருமகாசந்நிதானங்கள்; கற்றறிந்த தமிழ்ச்சான்றோர்கள்; சைவ நெறியைப் பற்றி முழுவதும் தெரிந்தவர்கள்; சைவத்தில் ஈடுபட்டிருக்கிற காரணத்தினாலே மற்ற சமயங்களைப் புறக்கணித்துவிட வேண்டும் என்று எண்ணாமல் அவைகளைப்பற்றியு ஆராய்ந்து கருத்துக்களைத் தெரிவிக்கிறவர்கள்; தமிழ் இலக்கியங்களைக் கற்றறிந்தவர்கள்; தவத்திரு குன்றக்குடி அடிகளாரைப்போன்று இந்தக் காலத்திலே நம்முடைய சமயத்தை அந்தக் காலத்திற்கேற்றவாறு மாற்ற வேண்டுமா? வழிமுறைகளை ஏதாவது மாற்றி அமைக்க வேண்டுமா? என்கிற அந்தச் சிந்தனையிலும் தங்கள் கருத்துகளைச் செலுத்துகின்ற சான்றோர்கள் வீற்றிருக்கின்றார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்கள் இருக்கிற இந்த அவையில் எனக்கு இந்த விஷயங்கள் தெரியாது என்று எடுத்துச் சொல்வதிலே நான் தயக்கம் காட்டினால் என்னைவிடச் சமுதாயத்திற்குக்கேடு செய்கிறவன் வேறு யாரும் இருக்க முடியாது என்பதினாலேதான நான் இந்தக்கருத்தைத் தாராளமாக எடுத்துச் சொல்லுகிறேன்.

எனக்குத் தெரியாது என்று சொல்லுவதை - தெரியாது என்று சொல்லாததனாலேதான் இந்தநாட்டிலே இவ்வளவு பெரிய குழப்பங்கள். ஆண்டவன் இருக்கிறானா? இல்லையா? - எனக்குத் தெரியாது என்று சொன்னால் நான் புத்திசாலி என்று ஏற்றுக் கொள்வேன். என்னாலே கண்டுபிடிக்க முடியாத ஒன்றை, ஆராய முடியாத ஒன்றை ஆராய்ந்து எதுவுமே இதுவரை கண்டு பிடித்துத் தெளியாத ஒன்றை இல்லை என்று நான் சொல்வேனேயானால் அதற்கு என்ன பெயரிட்டு மற்றவர் அழைப்பது என்பதை நான் அவர்களுக்கே விட்டு விடுகின்றேன். ஆகவே 'இருக்கிறான்' என்று சொல்லுவது நம்பிக்கை; எனக்குத் தெரியாது என்று சொல்லுவது நடைமுறை; ஆனால் இல்லை என்று சொல்லுவது பிடிவாதம்; அல்லது அறியாமை

ஆகவே இப்படிப்பட்ட குழப்பமான உணர்வுகளை இந்தச் சமுதாயத்திலே உருவாக்கிக் கொண்டிருந்த காரணத்தினாலே தான் இந்த ஆலயங்களைப் பற்றிக்கூட நமக்குப் பல்வேறு உண்மைகள் தெரியாமல் - நாம் அதைப்பற்றி யெல்லாம் பேசிக்கொண்டிருந்தோமே என்று நான் எண்ணிப் பார்க்கின்றேன்.

நான் ஒருாலத்திலே – முன்னூறு, நானூறு ஆண்டுகளுக்கு முன் – நம்முடைய தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இருக்கும் பகுதிதான் நமக்கு சொந்த ஊர்மாதிரி–அந்த ஆலயம் தான எங்களுக்கும் ஆலயம்–அந்த ஆலயத்திலேதான் போய்க் கடவுளை வணங்கி ஒருநாள் ஊரைவிட்டு ஓடியதும் கார்த்திகை அன்றைக்குத்தான் – கார்த்திகை அன்றைக்கு, வீட்டிலே சொல்லிக் கொள்ளாமல் நாச்சியாபுரத்திலிருந்து குன்றக்குடிக்குப் புறப்பட்டு வந்தவன்தான் அப்படியே ஓடி வந்து விட்டேன். அதுதான் என்னுடைய வாழ்க்கைப் பயணத்திலே ஒருமாறுதல் கட்டம். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையிலேயே – ஆலயத்திலே – அவ்வளவு வழிபாட்டிலே நம்பிக்கை வைத்திருந்தவன். பின்னர், T. K. S. சகோதரர்கள் நாடகக்குழுவிலே பதின்மூன்று வயதிலே சேர்ந்தபிறகு, உடைகளை வைத்துக் கொண்டிருந்த பெட்டியிலே படங்களையெல்லாம் வைத்துப் பூஜைசெய்து, பெரியாருடைய பகுத்தறிவுக் கொள்கையிலே ஈடுபட்டிருந்தவர்களை அப்பொழுது எதிர்த்துக் கொண்டிருந்தவன். அதற்குப் பிறகுதான் அந்த இயக்கத்திலே என்னைத் தொண்டனாக ஆக்கிக்கொண்டு ஏறத்தாழ 1940ம் ஆண்டிலேயிருந்து 1978ம் ஆண்டு வரை சில நேரங்களிலே ஆலயங்களுக்குச் சென்றிருக்கின்றேன். அந்தஆலயங்களுக்குள்ளே நுழைந்து அங்கே என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும் அந்த ஆலங்களிலுள்ள சிறப்பான சிற்பங்களை – தொன்மை வாய்ந்த சிறப்புக்களைப் பார்க்கவும் நுழைந்திருக்கின்றேனே தவிர – வேறு நேரங்களில் நான் ஆலயங்களில் நுழைந்ததில்லை – போனதும் இல்லை – போகவேண்டும் என்கிற உணர்வும் இல்லை. ஆனால் இந்த 38 ஆண்டுகள் ஆலயங்களுக்குள்ளே போகாமல் இருந்த அந்தக் கடனை எல்லாம் சேர்த்து வட்டியும் முதலுமாக இந்த 1978ல் நான் அறநிலையத்துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒருநாளைக்கு 4 அல்லது 5 ஆலயங்களுக்குச் செல்லவேண்டிய அந்தக்கட்டாயத்திற்கு ஆளாக்கப் பட்டிருக்கின்றேன். நூற்றுக்கணக்கான படிகள் ஏறி மலைமீது உள்ள ஆலயங்களுக்கும் செல்ல வேண்டிய நெருக்கடிக்கும் ஆளாகி இருக்கின்றேன்.

(தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

# திருவருட்பாத் திரட்டு

( பொழிப்புரையுடன் )

**வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,**

( மலர் 43, இதழ் 10, பக்கம் 492 இன் தொடர்ச்சி. )

புலிகரடி முதலான மிருக்மும் பேய்களும்
பொல்லாத மாதர் மயலும்
பொறியரவ முதலான துட்டசெந் துக்களும்
பொங்கியெழு மெம தூதருஞ்
சிலேவேடர் முதலான திருடரும் படைகளுந்
தினகராதியர் தோடமுந்
தேகமுறு பிணிகளுஞ் சித்தமுறு பிணிகளும்
சீவன்மே லுறுபிணிகளும்
நிலநீர் நெருப்புவளி வானினல் வருமிடரு(ம்)
நில்லாம லோட என்முன்
நீங்காமல் நீநின்று தமருக முழங்கவே
நீண்டகுர லிடியிடிக்கக்
கலகலெனவே சிலம்பஞ்ச லெனு மொழிதந்து
கருணையுடன் விளையாடுவாய்
காசியெனும் ஒருவார ணசிநக ரானந்த
கால வயிரவ நாதனே. 7

(பொ—ரை) காசியிலுள்ள காலவயிரவநாதனே! புலி கரடி போன்ற விலங்குகளும், பேய்களும், துன்பந்தரும் பெண்கள்பாலுள்ள ஆசையும், பாம்பு முதலிய விடமுடை உயிர்களும், அடர்ந்தெழுகின்ற யமதூதர்களும், வில்லுடைய வேடர்முதலிய திருடர்களும், படைகளும், சூரியன் முதலிய கோள்களால் விளையும் குற்றமும், உடற்பிணிகளும், அறிவைப் பற்றும் பிணிகளும், ஆன்மாவைப்பிணிக்கும் பிணிகளும், நிலம் நீர் நெருப்பு வளி வான் எனும் ஐம்பூதங்களால்வரும் இடையூறுகளும் நிற்காமல் நீங்கும்படி என்முன் நீ—நீண்ட ஒலிகூடிய இடியெனத் தமருகம் முழங்க, கலகலெனச் சிலம்பு முழங்க — அஞ்சாதே என்ற ஆறுதல் மொழிகூறிக் கருணையுடன் விளையாடவேண்டும்

(கு-ரை) பொல்லாத மாதர் மயல் - உரமுடையோர்களை யும் உலுத்தர்களாக்கும் மாமாயை.

தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கைய ரால்வரும்
காமமில்லை எனில்கடுங் கேடெனும்
நாமமுமில் லைநரகமு மில்லையே. (கம். அயோ. மந்தரை. 21.)

படைகள் - அரசனது படைகளாலும் துன்பம் நேருவதுண்டு. வேடராகிய கள்வர் - படை - உயிர்கள் - இவற்ருேடு தானும் தன்படையும்கூட துன்பம்செயும் நிலை உண்டு. இந்த ஐந்து பயங்களையும் நீக்கி ஆளுகை செய்பவனே சிறப்புடையவன் - என்பார் சேக்கிழார்.

மாநிலங் காவலனு வான்மன்னு யிர்காக்குங்காலை
தானத னுக்கிடை யூறுதன்னுல் தன்பரிச னத்தால்
ஊனமிகு படைத்திறத் தால்கள்வ ரால்உயிர் தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப் பானல்லனே.

(பெரிய. திருநகர. 36.)

ஆதியான்மிகம் - வேடர், விலங்கு, தேள், அரவம் இவற்ருல் வருவன. ஆதிதைவிகம் - கருவிலே ஏற்படும் துன்பம், நரை, திரை, பிணி என்பன. ஆதிபௌதிகம் - பனி, இடி, வாடை, நீர், நெருப்பு இவற்ருல் வருவன. இம்மூன்றுவகைத் துன்பங் களையும் இப்பாடல் நினைப்பிக்கிறது.

செங்கமல முகமலர்ந் தாடவிரு காலில்
சிலம்பு மறைமணியு மாடச்
செம்பவள மேனிமேல் வெண்பூதி யாடவொளி
திகழ் மந்தகாச மாடத்
தங்குகரதல கபாலஞ் சூல தமருகந்
தாங்கு வெம்பாச மாடச்
சந்திரனு மரவுங் கிடந்து விளையாடவளர்
சடைக ணின்ருட வடியார்
பொங்கு மலதிமிரங் கலங்கி யுருவாடவருள்
பூரண கடாக்ஷ மாடப்
புவனங்க ளாடஅலையாட நுரையாட வெகு
பூந்திவலை யாட வருமோர்

கங்கைநதி யாடவெனை வாவென் றழைக்கநீ
கருணையுட ஞேடி வருவாய்
காசியெனு மொருவார ணசிநக ரானந்த
கால வயிரவ நாதனே. 8

(பொ-ரை) காலவயிரவநாதனே! சிவந்த தாமரை முகம் மலர்ந்தாட, இருகால்களின் சிலம்பும், (வலதுகாலில்) ஒலிக்கும் மணியுமாட, பவளநிறமேனிமேல் விளங்கும் வெண்ணீருட, ஒளிபூத்த புன்னகையுமாட, கையிலுள்ள மண்டையோடு, சூலம், உடுக்கை, கொடியகயிறுமாட, மதியும் பாம்பும் விளை யாட, வளருகின்ற சடைமுடியாட, மலவிருள் நீங்கிய அடியார் வடிவமாட, கருணைப்பார்வையாட, உலகங்கள் ஆட, அலை நுரை திவலையாடும்படி வருமோர் கங்கையுமாட-எனை அழைக்க நீ கருணையுடன் ஓடிவருவாய்.

(கு-ரை) அறைமணி - ஒலிக்குமணி வலது காலில் ஒற்றை மணியொன்று கட்டப்பட்டிருக்கும்; வெம்பாசம்-உடையானின் பண்பு உடைமை மேல் ஏற்றப்பட்டது. மேனி - 'பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்' அப்பர் ( 4-81-3 ) கரதலந்தங்கு கபாலம் என மாற்றுக. 'தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண்டார்' (6-96-1)

" கட்டும் பாம்பும் கபாலங்கை மான்மறி
இட்ட மாயிடு காட்டெரி யாடுவான் " - (5-2-3.) என்பார் திருநாவுக்கரசர்.

என்றுதான் சிவகாசி யென்ஞெளிரு முத்திநக
ரெல்லைதனை வந்து பணிவேன்
என்று கங்காநதியின் மூழ்கியிடு வேன்முத்தி
யீந்திடும் மணிகன்னிகை
நன்றுநன் றென்றுபடி வேனென்று ஞானமிகு
ஞானவாவியில் மூழ்குவேன்
ஞான வானந்த பூரண மான நின்பாத
நளினங்க ளென்று பணிவேன்
ஒன்றுநின் னருளையென்றே பெற்றிருப் பனென்
றுந்தியிடும் ஏழையேன்முன்
உபயபரி புரமசைய அவிமுத்த மென்ரேதும்
ஓருரினுக் கழைக்கக்

கன்றினைத் தேடிஆன் ஓடியே வருவதிற்
கருணையுடன் ஓடிவருவாய்
காசியெனு மொருவார ணசிநக ரானந்த
கால வயிரவ நாதனே. 9

(பொ-ரை) கால வயிரவநாதனே! சிவகாசி யென்றொளி விடும் முத்திநகர் எல்லைதனை என்று வந்து பணிவனோ! கங்கையில் என்று முழ்குவேன். முத்திதரும் மணிகன்னிகையில் நன்று நன்றென்று மகிழ்ந்து படியும்நாள் என்றோ! ஞானமிகும் ஞான வாவியில் முழ்கும்நாள் எப்போது? ஞான இன்பம் நிறைநின்பாத தாமரைகளை என்று பணிவேன்! பொருந்தும் நின்னருளைப் பெற்றிருப்பது என்றோ என்று பொங்கியெழுகின்ற ஏழையாகிய என்முன் இரண்டான சிலம்புகள் ஒலிக்க அவிமுத்தமென்ற ஒப்பற்ற ஊரினுக்கழைக்க - கன்றைத் தேடிவரும் பசுப்போல கருணையுடன் ஓடிவருவாய்.

(கு-ரை) என்றுதான் - என்பதிலுள்ள 'தான்' எனும் துணை வினை ஆற்றாமை உணர்வினைக் காட்டுகிறது. உந்துதல் - தூண்டுதல். அவிமுத்தம்-விடவேண்டியகாலத்தும் விடாமை என்பது பொருள்.

திவோதானன் என்பவனுக்காகக் காசியை அகலும்படி நேர்ந்தும் விசுவேசர் சூக்குமமாய் அங்கே இருந்தார். (காசி.கல. 5-ஆம் பா. உரை,)

(தொடரும்)

---

# குருமணியின் அருள்மொழி

## தோத்திரமும் சாத்திரமும்

தோத்திரம் அன்பையும், சாத்திரம் அறிவையும் வளர்க்கும். தோத்திரங்களாகிய திருமுறைகள் பன்னிரெண்டு. இவற்றை அருளிச்செய்தவர்கள் இருபத்து எழுவர். சாத்திரங்கள் பதினன்கு. இவற்றை அருளிச்செய்தவர்கள் அறுவர். இவ்விருதிறத்தாரும் அருளிய அருள் நூல்களாக விளங்கும் இத்தோத்திர சாத்திரங்களை மக்கள் அறிந்து கடைப்பிடித்து அன்பும் அறிவும் பெற்றுச் சிறப்புறுதல் வேண்டும்.

கட்டுரை எண். 58

# அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக் கன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க் குளவாகிய சின்னங்களே! 52

## அ. பிறைமுடித்த ஐயன் திருமனையாள்

(1) பிறைச் சந்திரனைத் திருமுடியில் சூடிய இறைவனின் சிறப்புமிக்க இல்லாள் என அம்பிகையைச் சிறப்பிக்கிறார்.

(2) சந்திரசேகரர், சந்திரமௌளி, பிறைசூடி என்றெல்லாம் அழைக்கப்படுபவன் சிவபெருமான். தன்னைச் சரண் என்று நாடி அன்பு செய்தவனைத் தலைமீது தூக்கிவைத்துக்கொண் டாடும் இறைவனது திருமனையாள் அவனைப்போலவே அடியார் களுக்கு அரசவாழ்வு முதலியபோகங்களை அளிப்பவள்என்பது உட்கருத்து.

(3) பிறை முடித்த ஐயன் திருமறைக்காடு என்னும் வேதாரணிய சிவாலயத்தில் அணையும் தறுவாயிலிருந்த விளக் கினைத் தூண்டிச் சுடர்விடச் செய்த எலியினைச் சிறப்பு மிக்க மாவலி மன்னனாகப் படைத்தவன் ஆவான். விளக்கிலிருந்த எண்ணெய்யினைப் பருகவந்த எலிக்கே பேரரசளித்தவன்.

(4) பிறைமுடித்த ஐயன், வில்வமரத்தின் மீது அமர்ந்து தன்மீது இலைகளைப் பறித்து எறிந்த குரங்கினை முசுகுந்த மன்ன னாகப் படைத்த கருணையாளன்.

(5) பிறைமுடித்த ஐயன் சிலந்தியினைக் கோச்செங்கட் சோழனாகப் பிறக்கச் செய்தும் எழில்மாடக் கோயில்கள் எழுப்பச் செய்தும் புகழ்பெறச் செய்தவன்.

(6) பிறைமுடித்த ஐயனைப் போலவே அவனது துணைவி யாகிய அம்பிகையும் சுதர்சனன் முதலான அடியவர்களுக்குப் பேரரசளித்த வரலாறுகளைத் தேவிபாகவதம் குறிப்பிடுகிறது ஐயனைப் போலவே அம்மையும் அன்பு செய்வோர்க்கு அரச வாழ்வளிக்கும் பெருங்கருணையினை யுடையவள். ஆகவே அவள் ' திருமனையாள் ' என்னும் சிறப்புக்குரியவள் ஆகிறாள். பிறர்க்கு உதவிட வசதியும் கருணையும் உடையவர்களாலேயே முடியும். இறைவன் பிறைமுடித்த கருணையும் சென்றடையாத திருவும் உடையவன். எனவே அவனது இல்லாளைப் ' பிறை முடித்த ஐயன் திருமனையாள் ' என்று சிறப்பித்தார்.

### ஆ. அடித்தாமரைக்கு அன்புமுன்பு செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே!

(1) அத்திருமனையாளிடம் பக்தியாகிய அன்புபூண்டு ஒழுகிய தவப்பேற்றினை முன்பு பெற்றிருந்தவர்களுக்குப் பாடலின் முற்பகுதியில் குறிப்பிட்ட வையம், துரகம் முதலியன அடையாளங்களாகும்.

(2) அதாவது இப்பிறவியில் வையம் துரகம் முதலான அரச போகங்களைப் பெற்றுத் திகழ்ந்திருப்பவர்கள் முற்பிறவி யில் அன்னையினை வழிபட்டவர்கள் என்பது பொருள். அவ் வழிபாடு நேரே முக்தியளிக்கவல்லது எனினும் பயன் கருதி வழிபட்ட அடியார்கள் அவற்றினை எய்துவர் என்பது கருத்து.

(3) அன்பே முதிர்ந்து பக்தியாகிறது. அன்பேசிவமாகிறது. அன்பே ஏனைய நற்செயல்களுக்குக் காரணமாகவும் ஆகிறது ஆகவே ' அன்பு முன்பு செய்யும் தவம் ' என்றார்.

(4) திருவடிக்கு அன்பு செலுத்தித் தொண்டாற்றுவதே தவநெறியும் ஆகும். திருத்துறையூரில் சுந்தரர் தவநெறியினை வேண்டிப்பெற்றார் என்னும்வரலாறு ஈண்டு மீண்டும் எண்ணிச் சிந்தித்தற்குரியது.

(5) அரசவாழ்வு பெற்று மகிழ்ந்திருக்கும் சிறப்புடைய வரைக் குறிப்பிடும் பொழுது " இது பூர்வஜன்மப் புண்ணியம் " அல்லது "இதுஅவர்செய்த தவத்தின்பயனால் கிட்டியிருக்கிறது" என்று கூறுகிறோம். அவ்வாழ்வு " அன்னையின் அடித்தாமரைக்கு அன்பு முன்பு செய்ததன் பயன்" என்கிறார் அபிராமிபட்டர்.

### இ. வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை பெய்யும் கனகம் பெருவிலை ஆரம்

(1) அச்சின்னங்கள் தேர், குதிரை, மதயானை, பெரியமுடி, பல்லக்கு, திரையாகக் கொட்டும் பொன் மற்றும் பெருவிலை யுடைய மாலையும் ஆகும்.

(2) வையகம் என்பது நிலம். தேர், வண்டி ஆகியவற்றினையும் 'வையம்' என்ற சொல் குறிக்கும். அரசனுக்கு முதலில் ஆள நிலம் வேண்டும். நாற்படைகளும் வேண்டும். வசதியான பயணத்துக்கு ஊர்தியும் வேண்டும். எனவே அம்மூன்றினையும் குறிக்கும் வையத்தை முதலில் கூறினர். "வையமும் பாண்டிலும்..." என்ற கம்பராமாயணப் பாடலில் 'வண்டி' என்ற பொருளில் 'வையம்' என்னும் சொல் எடுத்தாளப்படுகிறது.

(3) மன்னர்களுக்குக் குதிரைப்படையும் இன்றியமையாததாகும். வீரர்களின் வேகமான பயணம், ஓலை எடுத்துச்செல்லல். மலைப்பாதைகளைக் கடத்தல் போன்ற செயல்களில் முற்காலத்தில் குதிரையே பயன்படுத்தப்பட்டதால் துரகம் என்னும் குதிரையையும் அரசபோகத்தின் அடையாளம் என்றார்.

(4) எதிரிகளையும் அவர்களது கோட்டைகளையும் தாக்கிப் போரிடுபவைகளும், கம்பீரமாக அணிவகுத்துச்செல்பவைகளுமாகிய யானைகளை 'மதகரி' என்றார். "யானைகட்டி வாழ்ந்தவன்" என்றும் "யானைகட்டிப் போரடித்தவன்" என்றும் அரசபோகத்தைக் குறிப்பிட யானையினையே சொல்கிறோம். எனவே மதகரியும் அரச சின்னமாயிற்று.

(5) அன்பு முன்பு செய்தோர் சிறுநிலத்தை ஆளாது பெருநிலத்தை ஆளும் சக்ரவர்த்திகளாக – மாமன்னர்களாக ஆவார்கள். ஆகவே அவர்களது முடி (மகுடம்) 'மாமகுடம்' எனப்பட்டது. பெரிய மகுடம் எனப் பொருள் கொள்ளாது மாமன்னருக்குரிய மகுடம் எனக் கொள்ளுதல் வேண்டும். அத்துடன் அம்பிகை துணை நிற்க அம்மன்னர்கள் நெடுங்காலம், வீழ்ச்சியின்றி ஆளும் நிலை பெற்றுவிடுவர். அதனாலும் அவர்களது மகுடம் 'மாமகுடம்' எனப்பட்டது.

(6) சிவிகை சிறியபயணங்களுக்கும், அரண்மனைப் பெண்களின் பயணங்களுக்கும், குருமார்கள், சான்றோர்கள், புலவர் பெருமக்கள் ஆகிய அரசனைச் சார்ந்தவர்களின் பயணங்களுக்கும் உதவும் ஊர்தியாக அமைந்தது. எனவே அதுவும் அரசவாழ்வின் அங்கமாக விளங்கியது.

(7) அன்பு முன்பு செய்தோர் மாமன்னர் ஆகிவிடுகின்றார், அவர் ஆட்சியின் கீழ் அரசாளும் சிற்றரசர்கள் திரையளக்க வருகின்றனர். பொன்னைக் கொட்டி, பெய்து அளக்கின்றனர், "மன்னவர் தருதிரை அளக்கும் மண்டபம்" என்று தசரதச் சக்ரவர்த்தி திரை அளிப்போருக்கென்று தனிமண்டபமே அமைத்திருந்ததாகக் கம்பராமாயணம் கூறுகிறது. அங்குப் பொன் பெய்யப்படுவதால் 'பெய்யும் கனகம்' என்றார்.

(8) விலைமதிப்பு மிக்க நவரத்தினங்களால் ஆன மாலைகளை மாமன்னர்கள் தமக்கும் தம்மைச் சார்ந்தாருக்கும் வாங்க வியலும். நட்பு நாட்டு அரசர்களின் அன்பளிப்பாகவும் பகை நாட்டுப் படையெடுப்பின் வெற்றிப் பரிசாகவும் அவை கிடைப்பதுண்டு. சராசரி மக்கள் வாங்க வியலாத பெருவிலை ஆரம் அவர்களுக்குக்கிட்டும்.

(9) 'ஆரம்' என்ற சொல் சந்தனத்தையும் குறிக்கும்' அன்றும் இன்றும் சந்தனம் விலைமதிப்புள்ள பொருளாகவே இருந்து வருகிறது. சந்தனப் பேழைகளும் பிறவும் அரச போகமேயாகும்.

ஈ. (1) புவியாளும்மன்னர்களாக ஆகி மேற்கண்டபோகப் பொருட்களை, அன்பு முன்பு செய்யும் தவமுடையார்கள் எய்து கின்றனர். அத்தவமுடையோரில் சிலர் ஞானச்செங்கோல் செலுத்தும் பீடாதிபதிகளாகவும், கலையரசர்களாகவும், கவியர சர்களாகவும் விளங்குகின்றனர்.

(2) துரகம், மதகரி, சிவிகை முதலியன அவ்வாறு ஞானச் செங்கோல் ஒச்சும் சந்நிதானங்களுக்கும் விருதுகளாகவிளங்கு கின்றன. அவை அடித்தாமரைக்கு அன்பு முன்பு செய்ததன் பயனேயாகும்.

(3) கவிச்சக்கரவர்த்திகளாக விளங்கிய காளிதாசன் ஒட்டக்கூத்தர் போன்ற அன்னையின் பக்தர்கள் மேற்கண்ட விருதுகளுடன் வாழ்ந்து வந்தனர் என்பதும் வரலாறு காட்டும் செய்திகளாகும்.

(4) 'பெய்யும் கனகம்' என்றசொற்றொடருக்கேற்பஞானச் செங்கோலர்களாகிய ஆதிசங்கரர், நிகமானந்த தேசிகர் போன் றோர் அன்னையினைவேண்டப்பொன்மழை (கனகதாரை) பெய்த வரலாறுகளும் உண்டு.

(5) அவ்வாறே ஞானச் செங்கோலர்களுக்குக் கனகாபி ஷேகம் செய்யப்படுகிறது. அதாவது பொற்காசுகளைப் பெய்து போற்றுகின்றனர். எனவே அவர்களுக்குப் 'பெய்யும் கனகம்' என்ற அடைமொழியும் பொருந்துகிறது.

(6) 'ஸாம் ராஜ்ய தாயினி' – 'பேரரசை அளிப்பவள் என்று சகஸ்ரநாமம்அம்பிகையினையும் போற்றுகிறது. அச் சாம் ராஜ்யாதிபதிகளின் சின்னங்களை இப்பாடல் குறிப்பிடுகிறது. பயன்கருதுவோர் பேரரசாட்சி எய்துதலும், பயன் கருதாதோர் மோட்சசாம்ராஜ்யம் எய்துதலும் இப்பாடலின் பாராயணபலன் ஆகும்.

(தொடரும்)

# நஞ்சுண்ட அமுதே போற்றி!

திரு. எஸ். சாயிராம், சென்னை.

### அறுசீரடி விருத்தம்

அமுதக் கடலே அருட்சிவமே
அரும்பாற் கடலில் பிறந்தவிடம்
அமைந்து பொலியும் எழில்மிடற்றும்
அன்னம் பாலோ டுடன்கலந்தே
அமைந்த நீரைத் தான்நீக்கி
அமுதப் பாலை யேபருகும்
அமுதிற் கலந்த கொடுவிடத்தை
ஐய னேநீ பிரித்துண்டாய். 1

கண்டா ரைக்கொல் லும்நஞ்சை
கயிலை மலையாய்! மலையாது
கண்டந் தன்னில் கொண்டனையே
கருணைக் கடலே! கொடுவிடம்நின்
கண்டந் தன்னில் பொருந்தியதால்
கண்டு பணியப் பெற்றிடும்காண்
கண்டம் இலாய்நின் கண்டத்தில்
கடுவைத் தமுதம் ஆக்கினையே. 2

கண்டம் என்ற நன்னிலத்தில்
கருணை யாமுன் திருவுளநீர்
மண்டிப் பெருக லாலன்றே
மரணந் தருநற் கொடுவிடமும்
விண்ட நீல மலராக
விளங்கிப் பூத்துன் அருள்மணத்தை
எண்டி சைக்கும் பரப்பியதே
எல்லா உலகும் உய்வுறவே. 3

அமுதக் கடல்நீ ஆகையினல்
அரிய விடத்தைக் களம்சேர்த்தே
அமுதம் ஆக்கி மூவுலகும்
அன்பால் போற்றச் செய்தனையே
அமுதம் உயிர்க்(கு) அருங்காப்பாம்
அருநஞ்(சு) உயிரைக் கொன்றிடுமே
அமுதாய் விடமும் ஆகியதே
அரனே! நின்றன் களம்சேர்ந்தே. 4

தாங்கற் கரிய கொடுவினையால்
தளர்ந்து வந்தோர் சுமையேற்றுத்
தாங்கி அவர்தம் வினைநீக்கித்
தழைக்கச் செய்வாய் என்றபெரும்
பாங்கை உலகெ லாம்உணரப்
பரமா! கடல்நஞ்(சு) உண்டாயே
ஓங்கும் இந்தத் திருவருளால்
ஒப்பில் தியாக ராசன்நீ! 5

நீல கண்டப் பேரன்பர்
நித்தம் போற்றிப் பணிந்ததிரு
நீல கண்டா! நின்மலனே!
நிறைவே வானோர் தானவரும்
ஞாலம் எல்லாம் வாழ்ந்திடவே
நஞ்சும் நான்கு மறைபோற்றும்
சீல அமுதாக் கியஅமுதே
சிவ!நின் நிறைவாம் கழல்போற்றி. 6

நஞ்சுண்ட அமுதே போற்றி
நான்மறைப் பொருளே போற்றி
நெஞ்சுண்ட நினைவே போற்றி
நிமலைநற் பாகா போற்றி
மஞ்சுண்ட சடையாய் போற்றி
மங்கலப் பொருளே போற்றி
பஞ்சுண்ட திருப்பாதத்தால்
பதைத்தகூற் றட்டாய் போற்றி. 7

நஞ்சினை மிடற்றில் வைத்து
நஞ்சுக்கும் கருணை செய்தாய்
நஞ்சணி கண்ட னுனை
ஞானபூ ரணனே! கொல்லும்
நஞ்சுடை நாகம் பூண்டு
நாகபூ டணனுமா னய்
செஞ்சுடர்ச் சோதி! உன்றன்
திருவருள் என்னென் பேனே. 8

### வெண்பா

அமுதுண்ட தேவர் அழிந்தாலும் நஞ்சுண்(டு)
அமுதாக மன்னும் அரனே — தமையுற்ற
சீரடியார் வாழ்முதலே தேவே அருள்வாய்நின்
சீரடிசிந் திக்கும் சிறப்பு.

---

## பிழையைக் கண்டுபிடியுங்கள்

| | |
|---|---|
| 1. இந்தியாவின் முதல் ஜனாதிபதி | 1. ரவீந்திரநாத் தாகூர் |
| 2. இலக்கியத்திற்கு நோபெல் பரிசு பெற்றவர் | 2. அருணா ஆசப் அலி |
| 3. லெனின் சமாதானப் பரிசு பெற்றவர் | 3. பாபுராஜேந்திரபிரசாத் |
| 4. முதல் இந்திய கவர்னர்ஜெனரல் | 4. டென்ஸிங் |
| 5. எவரெஸ்ட்உச்சியைக்கண்டவர் | 5. ராஜகோபாலாச்சாரியார் |
| 6. சிலநாட்கள் இந்தியநாட்டுப் பிரதமராக இருந்தவர் | 6. பதஞ்சலி சாஸ்திரி. |
| 7. இந்தியாவின்உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்தவர் | 7. சரண்சிங் |
| 8. பிரிட்டிஷ்பார்லிமெண்டில் உறுப்பினராகஇருந்தஇந்தியர் | 8. திலீப் சிங் சாட் |
| 9. அமெரிக்க பாராளுமன்றத்தில் உறுப்பினராகஇருந்தஇந்தியர் | 9. தாதாபாய் நௌரோஜி |

(சரியான விடையைக் கீழே காணலாம்)

1. (3) 2. (1) 3. (2) 4. (5) 5. (4) 6. (7) 7. (6) 8. (9) 9. (8)

**கடிதம்:**

சு. பாலகிருஷ்ணன் — மேலப்பாதி (அஞ்சல்)
திரு. வி. க. நூல்நிலையம் செயலர். — தஞ்சை மாவட்டம்.

அன்புசால் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னர் திருவடிகட்கு வணக்கம்.

"ஞானசம்பந்தம்" 10—3—1984 "கம்பனுக்கோர் கலைக் கோயில்" என்ற தலையங்கத்தையும், 10—4—84 இதழில் கம்பர் கோட்டக்கால்கோள் விழாவில் வழங்கியருளிய ஆசியுரையை யும் படித்துப்பார்த்தேன். இதுகாறும் கண்டறியாத பல அரிய கருத்துக்களைக் கண்ணுற்றேன். "இவன்தந்தை என்னோற்றான் கொல்" எனும் சொல்லுக்கு இலக்கணமாகத் தசரதகுமாரனைப் படைத்து, வளர்த்துவரும் கம்பரின் காவியத்தில் இராமனின் வாழ்வு வள்ளுவமாக மலர்கின்ற அற்புதத்தைக் காணமுடிகிறது என்ற கருத்து மிக நுண்ணியது.

தாய் தந்தையரைப் போற்றுதல், குருவை மதித்துப்போற்று தல், நன்றியுணர்தல் முதலியவற்றை இராமபிரான் வாயிலாகவே கம்பர் உலகுக்குக்காட்டி நல்லநெறிகளைப் புலப்படுத்துகிறார். ஆதலாற்றான் கம்பருக்குக் கலைக்கோயில் இங்கே எழுப்பப் படுகின்றது. எழுப்பப்படுவது இன்றியமையாததுமாகும்" என்று திருவாய்மலர்ந்தருளியது சாலப்பொருத்தமே.

"உலகம் யாவையும்...............சரண் ஆங்கவரே" என்ற கம்பரின் பாடலை இரண்டிடங்களில் தேவையறிந்து கூறியிருக் கின்றீர்கள். இப்பாடலின் கருத்து அனைத்துலக எல்லாச் சமய மக்களுக்கும் பொதுவானவையேயாகும். இது நமது இந்து சமயத்தைச்சார்ந்த ஒரு கவிச்சக்ரவர்த்தியின் உள்ளத்திலிருந்து முகிழ்த்தமையுன்னி நாமெல்லாம் பெருமைகொள்ள நியாய முண்டு. கம்பர்கோட்டம் விரைவில் எழுந்து தகுந்த நினைவுச் சின்னமாக விளங்க எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சு கின்றனம்..........

---

## திருநீறு அணியும் முறை

திருநீற்றைப் பையிலிருந்து எடுக்கும்போது நிலத்திலே சிந்தாமல் எடுத்து, வடக்கேனும் கிழக்கேனும் நோக்கி உட் கார்ந்து அண்ணாந்து, "சிவசிவ" என்றாவது "சிவாயநம" என்றா வது கூறி, வலக்கையின் நடு மூன்று விரலினால் நெற்றியிலே அணிதல்வேண்டும்.

# கதிரவன் குடும்பம்

## 2. பூமி - P

கதிரவனின் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளில் ஒன்று பூமி. கதிரவனை முதல்வட்டத்திலே புதனும்(Murcury) இரண்டாவது வட்டத்திலே சுக்கிரனும் (Venus)சுற்றுகின்றன. மூன்ருவது வட்டத்திலே இருந்து கதிரவனைச் சுற்றும் கிரகம (Planet) நாம் வாழும் பூமி ஆகும். செவ்வாய் கிரகத்திலே இருந்து பார்த்தால் கதிரவனை மூன்ருவது வட்டத்திலே இருந்து இரு கிரகங்கள் சுற்றுவதுபோலத் தோன்றும். ஆனல் அது வெறும் காட்சி ஏமாற்றம் (Optical illusion) தான். நம் பூமியை நிலவு சுற்றிச் சுற்றி வருகிறது. நிலவு (Moon) ஒரு கிரகம் அல்ல; அஃது ஒரு துணைக்கோள் (Sub-Planat) தான். அது பூமியின் ஈர்ப்பு சக்தியினல் (Gravitation) இழுக்கப்பட்டு அதன் விளைவாக அது பூமிக்கு ஒரு துணைக்கோள் ஆகி அதனைச்சுற்றுகிறது. நிலவைப் பற்றிப் பிறிதொரு கட்டுரையில் காண்போம். இந்தக்கட்டுரையில் பூமியைப்பற்றி ஓரளவு கருதுவோமாக!

பூமி சூரியனிலிருந்து சுமார் 9,27,00,000 (ஒன்பதுகோடியே இருபத்து ஏழு லட்சம்) கல் தொலைவிலுள்ள ஓர் உள் நிலைக் கோள் ஆகும். இது முற்றிலும் உருண்டைவடிவமான கிரகம் அல்ல. வட துருவத்திலும் தென் துருவத்திலும் சிறிது அளவு இது தட்டையாகக் குழிந்துள்ளது. பூமியினது சுற்றளவு சுமார் 25,000 மைல் என்று கணித நூல் வல்லோர் கூறுகின்றனர். இது கிழக்கு மேற்காக 7929 மைல் என்றும், தெற்கு வடக்காக 7900 மைல் என்றும் அவர்கள் கணக்கிட்டுள்ளனர். இரண்டு அளவுகட்கும் உள்ள வித்தியாசம் 27 மைல்களே. ஆகையால் பூமி முழுதுமாக உருண்டை வடிவமாக இல்லாமல் சற்று மாறுபட்டு இருக்கிறது.

பூமி மணிக்கு ஓராயிரம் மைல் வேகத்தில் ஓர் ஆட்டிவிட்ட பம்பரம் போல் தன்னைத்தானே சுற்றிவருகிறது. சூரியனின் எதிரில் இச்சுழற்சி நிகழ்கிறது. இதனல் பகல் இரவு உண்டாகிறது. பூமி ஒருமுறை தன்னைத்தானே சுற்றி முடிக்க 23 மணி 59 நிமிடம் 4.1 விநாடிநேரம் ஆகிறது. அத்தோடு பூமி சூரியனை அதிவேகமாகச் சுற்றிவருகிறது. இதன்வேகம் என்னதெரியுமா?

இது மணிக்கு 67,000 மைல் வேகத்தில் கதிரவனைச் சுற்றி வருகிறது. பூமி பகலவனை ஒரு வட்டம் சுற்றிமுடித்தால் ஓர் ஆண்டு முடிகிறது. சரியாகக் கூறவேண்டுமானால் நம் பூமி ஒரு சுற்றுமுடிக்க 365 நாட்கள் 6 மணி 9 நிமிடம் 9.54 விநாடிகாலம் ஆகிறது. அந்த அளவுகளையே முறையே நாள் என்றும் ஆண்டு என்றும் நாம் நவில்கின்றோம். ஓர் ஆண்டு அளவில் பூமி சூரியனை அதிவேகமாகச் சுற்றி 57,60,00,000 (ஐம்பத்து ஏழுகோடியே அறுபது ஆயிரம்) கல்யாத்திரையைமுடிக்கிறது. பூமியில்வாழும் நமக்குப் பூமி தன்னைத்தானே சுற்றிவருவதும் சூரியனைச்சுற்றி வருவதுமாகிய நீண்ட நெடும் யாத்திரை நாம் அறியாதன்றோ நிகழ்கிறது?

பூமியின் குறுக்களவு சுமார் 8,000 மைலாகும். இதன் சுற்றளவு 65,000 மைல். பூமியாகிய இம் மண்ணுருண்டை ஒரு விநாடிக்கு 19 மைல், அந்தரத்தில் வான வெளியிலே ஓடுகிறது. நாம் அறியாது இது நிகழ்வது விந்தையிலும் விந்தையாகத் தோன்றுகிறது அன்றோ?

பூமி கதிரவனுக்கு அண்மையில் நெருங்கும்போது அதன் தூரம் 9,14,49,000 (ஒன்பது கோடியே பதினன்குலட்சத்து நாற்பத்து ஒன்பது ஆயிரம்) மைல். மிகவும் தூரத்தில் செல்லும் போது அதன் தூரம் 9,45,61,000 (ஒன்பதுகோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து அறுபத்து ஓராயிரம்) மைல் தொலைவு ஆகும். பூமியின்சுற்று ஒட்டத்தின் அளவும் இடத்துக்குஇடம் மாறுபடு கிறது. பூமி பகலவனுக்கு அருகில்செல்லும்போது இதன்வேகம் அதிகரிக்கிறது. பகலவனுக்குத் தொலைவில் செல்லும்போது இதன் வேகம் சற்றுக் குறைகிறது.

பூமியின் எடை யளவையும் விஞ்ஞானிகள் கணித்துக் கூறுகின்றனர். பூமியின் பொருள் திணிவு 66 நூறு மிலியன் மிலியன் மிலியன் டன்கள் எனக்கூறுகின்றனர். அதாவது ஆறு கோடியே அறுபது லட்சம் கோடி கோடி டன்கள் என்று அறிவிக்கின்றனர். (66 எழுதி அதன் பின் 20 பூஜ்யங்கள் சேர்த் தால் இந்தத் தொகை கிடைக்கும்) ஒரு காலத்தில் பூமி திரவ வடிவிலே இருந்தது என்றும், இன்றையநிலையில் அஃது இறுகிக் கெட்டியாகிவுள்ளது எனவும் விஞ்ஞானிகள் விளக்குகின்றனர். பூமி நீரைவிடச் சுமார் ஆறு மடங்கு அதிகத்திண்மையுடைய தாகும்.

பூமி ஒரு பெரிய காந்த உருண்டை. காந்தத்திற்கு உள்ள இரு துருவங்களும் பூமியின் இரு துருவங்களுக்கு அருகில்

உள்ளன. இதனால் தான் திசைகாட்டும் கருவியின் காந்த ஊசியின் ஒருமுனை எப்போதும்வடதுருவத்தையேகாட்டுகிறது. பகலவனைப்போலவே பூமியும் புரைகளாக அமைந்துள்ளது காற்று மண்டலம், நீர் மண்டலம், மண்மண்டலம் என்பவை. பூமியின்புரைகள் ஆகும். பூமியின் காற்றுமண்டலம் இறைவன் படைப்பின் விந்தைகளுள் ஒன்று. இக்காற்று மண்டலம் இயற்கை அன்னை நமக்குக் காவலாக அமைத்த கவசம் போன்றது. இது நம்மைப் பல தீங்குகளிலிருந்து காப்பாற்றி வாழவைக்கிறது. பூமியின் மேல் உள்ள கடல்களே இதன் நீர்மண்டலமாகத் திகழ்கிறது. உங்களுக்கு ஓர் உண்மை தெரியுமா? பூமியின் மேற்பரப்பில் முக்கால் பங்கு கடலாகப் பரவியுள்ளது. நாம் வாழும் மண் மண்டலம் பூமியின் மேற்பரப்பில் கால்பங்கே ஆகும்.

பூமி அதனை அடுத்திருக்கும் வெள்ளிகிரகம் (Venus) அதன் அருகிலிருக்கும்போது 2,60,00,000 (இரண்டு கோடியே அறுபது லட்சம்) மைல் தூரத்தில் இருக்கும். அது இதைது எதிர்ப்பக்கம் விலகிப் போகும்போது 160 கோடிமைலுக்கு அப்பால்இருக்கும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (தொடரும்)

— தொகுத்தளித்தவர் : சுவாமி வீரபாகு

ஆதாரம் :—

Captives of the Sun
by James S. Pickering. (New York)

அறிவியல் விருந்து :
— டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்
(பாரிநிலைய வெளியீடு, சென்னை.)

---

## உருத்திராக்கம் உடலுக்கு உறுதி

உருத்திராக்கம் என்னும் காயில் மனிதனுக்கு உரிய காந்த சத்தும் மின்சாரசத்தும் உள்ளன. அந்தச் சத்துக்கள் கூர்மையான இடத்திலேவந்து வெளிப்படும். காயின் உள்ளிருக்கும் சத்து சிறிதுசிறிதாக வெளிப்படும்பொருட்டே உருத்திராக்கக் காயின் மேல்புறம் முள்ளுமுள்ளாகப் படைக்கப்பட்டிருக்கிறது. நாம் அதைத் தரித்துக்கொண்டால் அந்தச் சத்துக்கள் காயினின்றும் வெளிப்பட்டு, தேகத்தின் இரத்தத்தோடு கலந்து, அதனைத் தூய்மைசெய்து உடலுக்கு உறுதிபயப்பிக்கும்.

— துடிசை கிழார்.

# பாலின் பலவகைப் பயன்கள்

[ டாக்டர் திரு. ஆர். தியாகராஜன் எல். ஐ. எம். அவர்கள், சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக்கல்லூரி, சித்தமருத்துவ உதவிப்பேராசிரியராகப் பணியாற்றியவர்கள். அவரது நூலான 'குணபாடம்' (Materia Madica) இரண்டு மூன்றும் பகுதிகளிலிருந்து பாலைப்பற்றிய இக் கட்டுரை தொகுக்கப்பட்டது. முதற்பதிப்பு 1952]

பாலுக்குப் பயம், கீரம், சுதை, பயசு, பாகு, அமுது, துத்தம், சாறு என வேறு பெயர்கள் உண்டு. பால், ஊன்செய்பொருளும் (Casein), சருக்கரையும், நில உப்புக்களும் சேர்ந்து நீர்மயமாய் உள்ளது. பாலில் முக்காலே அரைக்கால் பங்கு நீர் உண்டு. பாலின் நிறம் வெண்மை. ஆகையால் இதில் வானவில்லில் இருப்பது போன்று ஏழுநிறங்கள் கலந்திருக்கின்றன.

பாலில் உள்ள ஊன் செய்பொருள் மிகவிரைவில் நமது இரத்தத்தில் கலந்துவிடுகிறது. இதிலுள்ள கொழுப்பும், சருக்கரையும் உடலுக்கு வெப்பத்தையும் வன்மையையும் தருகின்றன. இதன்கண் கலந்திருக்கும் நில உப்புக்களில் சேர்ந்திருக்கும் சுண்ணம்பும், எரியமும் (Phosphorous) மூளையையும் நரம்புகளையும் வேலை செய்யுமாறு பண்ணுகின்றன. இந்த உப்புக்களுடன் உவரமும் (Sodium) சேர்ந்து, தாம்பற்ற சுரபிகளுக்கு (Ductless Glands) எழுச்சிமருந்துகளாக உபயோகப்படுகின்றன. மற்றும் சுண்ணம்புச் சத்தினால் பற்களும் எலும்புகளும் உறுதி அடைகின்றன பால் நமது உடம்புக்குள்ளே சென்றவுடன் செந்நீரின்கண் உள்ள வெள்ளை அணுக்கள் அதிகப்படுத்தப்படுகின்றன. இதன் பயனாக நோயை அணுக ஒட்டாமல் தடுக்கின்றது. அவைகள் உணவுப்பொருள்களை மாற்றம் அடையச்செய்து செந்நீரில் கலக்கப் பேருதவி செய்கிறது. இதனால் பாலில், உயிர்களின் வளர்ச்சிக்கும் உரத்துக்கும் வேண்டிய பொருள்கள் யாவும் கூடி அஃது ஒரு முழு உணவுப் பொருளாய் அமைந்து திகழ்வது வெள்ளிடைமலை.

பாலும் பால்சேர்ந்த பொருள்களும் உணவு ஆகின்றமையினாலும், காய்ச்சாமலே பாலை அருந்தக்கூடும் ஆகையாலும் இஃது எப்பொருளும் ஈடாகாத ஓர் உன்னத உணவுப்பொருளாய் இருக்கின்றது. இதிலிருந்து உண்டாக்கப்படும் தயிர், மோர், வெண்ணெய் முதலிய உடன்படு பொருள்களும் உரம் தரும் உணவுகளாக இருக்கின்றன. பாலில் வைட்டமின்கள் (Vitamins) அனைத்தும் அடங்கி இருத்தலினால் இஃது ஓர் உயர்ந்த உணவாகக் கருதப்படுகிறது.

பாலில்மிகச்சிறந்தது பசுவின்பாலேஆகும். தமிழ்மக்களால் பழங்காலம் முதற்கொண்டே இதன் சிறப்புத்தன்மைகள் உணரப்பட்டு வந்திருக்கின்றன. ஆயர்கள் பாலில் தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலிய பொருள்களைக் கண்டு வழங்கும் கலையில் கைதேர்ந்திருந்தார்கள். இத்தகைய ஆவின் பாலிலும் கபிலநிறப் பசு, செந்நிறப் பசு ஆகிய இப் பசுக்களின் பால் மிகமிகச் சிறந்ததாக எண்ணப்படுகிறது. ஆவின் பாலிலே ஐம்பூதத்தன்மைகளும் அடங்கியுள்ளன. பால் ஆகாசக்கூறும், தயிர் காற்றுக்கூறும், நெய் தீயின்கூறும், மோர் நீரின்கூறும், வெண்ணெய் மண்ணின்கூறும் உடையனவாக உள்ளன.

பசுவின் பாலானது குழந்தைகட்கும், கிழவர்கட்கும், பழைய சுரம், புண், சூலை, பிரமேகம், துர்ப்பலம், மெலிவு, இளைப்பு ஆகிய இவைகளை உடையவர்களுக்கும் ஆகும் என்பது மருத்துவ நூலார் முடிபு.

> " பாலர் கிழவர் பழம்சுரத்தோர் புண்ணுளி
> சூலையம் மேகத்தோர் துர்ப்பலத்தோர் — ஏலுமிவர்
> எல்லார்க்கு மாகும் இளைத்தவர்க்கும் சாதகமாம்
> நல்வாய் பசுவின் பால் நாட்டு "

என்பது மருத்துவநூல் கூற்றாகும்.

மேலும் தேரன் காப்பியப் பாடல் கூறுவது கருதத்தக்க கருத்துடையது ஆகும்

> " உணவின் பகுதியை ஒதலுற்றனம் இனிப்
> பணிவுள வெண்பசும் பால் இளைப் பாற்றும்
> நற்பசு வின்சுதை நாவிளைப் பாற்றும்
> பொற்பான செம்பசு போக்கும் கயப்பிணி
> புள்ளிய மேகநோய் போக்கிடும் நிச்சய
> மடாச் சுதைதீபனம் ஆக்கிடு மட்டபால்
> விடாத் தொடர் காத்திர வெம்மையை மாற்றுமே "

(பொருள்) வெண்மையான ஆவின் பால் களைப்பைப் போக்கும். காராம் பசுவின்பால் தாகத்தைத் தணிக்கும். செம்மை நிறமுள்ள ஆவின்பால் கபரோகத்தையும், புள்ளிகளையுடைய ஆவின்பால் மேகரோகத்தையும் போக்கடிக்கும். காய்ச்சாத ஆவின்பால் பசி தீபனத்தை உண்டாக்கும். காய்ச்சியபால் சரீரத்தில் உள்ள வெப்பத்தைத் தணிக்கும்.

எருமைப்பால் பருகுவதற்கு ஏற்றதன்று என்பது நூலார் துணிபு. அது திமிர்வாயுவை உண்டாக்கும். தெளிந்த புத்தியின் கூர்மையைக் கெடுக்கும். நல்ல மருந்தின் குணத்தை மாற்றித் தொலைக்கும்.

வெள்ளாட்டுப்பாலினல் வாதபித்த தொந்தம், சுவாசகாசம் சீதாதிசாரம், கபதோஷம், விரணம், வாதத்தில் உண்டாகிய வீக்கம் முதலிய துன்பங்கள் தீரும் நல்ல பசியும் உண்டாகும் என்க!

“ வெள்ளாட்டுப் பாலுக்கு மேவியநல் தீவனமாம்
தள்ளாடு வாதபித்தம் சாந்தமாம் — உள்ளிரைப்புச்
சீதமதி சாரம் சிலேட்டமமறும் புண்ணறும்
வாத சிலேட்மமும்போம் மாய்ந்து ”

செம்மறி ஆட்டுப்பால் ஆரோக்கியத்திற்கு ஆகாது. வைத்திய சாத்திரம் யானைப்பால் உடலுக்கு நல்லது என விளம்புகிறது. குதிரைப்பால் சுக்கிலப் பெருக்கத்தையும், சரீர வனப்பையும், புணர்ச்சியில் நிருவாகத்தையும் உண்டாக்கும் என உரைக்கின்றனர். ஒட்டகப்பாலும் உதவாது. ஆனல் வடக்கே மீரட் போன்ற ஊர்களில் காபி, டீ முதலியவற்றிற்கு ஒட்டகப்பாலே உபயோகப் படுத்தப் படுவதைக் காணலாம்.

கழுதைப்பால் மிக மதுரம் உடையதாம். இது வாதநோய் கரப்பான், புண், தழுதனை ரோகம், உள்வித்திரதிக்கட்டி, ஒட்டுக் கிரந்தி, சீழ்ப்பிரமேகம், சொறி, சிரங்கு, கட்டி, அற்புதவிரணம் சித்தப்பிரமை, பித்ததோஷம், கபநோய் ஆகியவற்றைப் போக்குமாம்.

“ கத்தபத்தின் பாற்குக் கரிய கிரந்தியறும்
சித்தப் பிரமைபித்தம் தீரும்காண் — தத்திவரும்
ஐய மொழியும் அதிக மதுரமுமாம்
செய்யமட மயிலே செப்பு ”

வெள்ளாடு, பசு இவைகளின் பாலுக்கு எட்டில் ஒரு பங்கும், எருமை செம்மறி இவைகளின் பாலுக்குச் சரிப்பங்கும், நீர்விட்டுக் காச்சவேண்டும். எவ்வித பால்களுக்கும் சுக்கு, சிறுகாஞ்சொறி வேர் சேர்த்துக் காய்ச்சில் அவைகள் வெள்ளாட்டுப் பாலுக்கு ஒப்பாகுமாம்.

பாலில் உண்டாகும் ஏட்டினல் பைத்திய நோயும், கொடிய வாந்தியும், மூர்ச்சையும் நீங்கும். மிகுபலமும், சுக்கிலமும், ஜடராக்கினியும் விருத்தியாம். இதைத் துர்ப்பல தேகிகள் உண்ணிலும் அவர்கள் உடலில் உள்ள குற்றங்கள் ஆறும்.

மருந்து அனுபானத்திற்குத் தாய்ப்பால் மிகச்சிறந்தது என மருத்துவ நூல்வல்லார் கூறுகின்றனர்.

தயிரின் பொதுக் குணத்தை கீழேகாணும் அடிகள் விளக்குகின்றன:

"தயிர்உணப் பயித்தியம்சஞ்சலம் அகற்றிமெய்
எயிலென இன்பமும் எய்திடப்புரியும்"

மோரின் பொதுக் குணம் வாதம் முதலிய முக்குற்றங்களையும் அதிகரிக்க ஒட்டாமல் அடக்கி, உடம்பை நாடோறும் காப்பாற்றும்.

வெண்ணெய்யின் பொதுக் குணம் உண்பார்க்குத் தாது விருத்தியும், தேகத்திற்குக் குளிர்ச்சியையும், பலத்தையும் உண்டு பண்ணும்.

நெய்யின் பொதுக் குணம், அதனை வேண்டிய அளவாய் உணவுகளில் சேர்த்து உட்கொள்ளின், அஃது உண்ட உணவைச் சரிப்படுத்திச் சரீரத்திற்கு மிகுந்த பலத்தையும் புஷ்டியையும் உண்டாகும்.

குழந்தைகள் வெறும் பாலைச் சாப்பிட்டுக் கொண்டே உடல் ஆரோக்கியம் பெற்று உடல் வளர்ச்சி பெற்று வளர்கின்றன அல்லவா? பால் அமுதத்தின் பெருமையைப் படித்துப் படித்துக் கூறவும் வேண்டுமா?

— தொகுப்பு: செந்தில்குமரன்.

# திருநாவுக்கரசர்

**வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன்** எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 2—9—1984 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப் பெற்ற கட்டுரை.]

ஸ்ரீ சொக்கநாதப் பெருமானை அகம் குளிர வழிபட்டுத் திரும்பினேன். அஷ்டலட்சுமிக் கட்டில் இருந்த அந்தப்புடைப் புச்சிற்பம் அடியேன் எண்ணத்தைக் கவர்ந்தது!

லயித்தேன்! என்ன இனிமையான வேய்க்குழல் இன்னிசை! அப்படி ஒரு பிரமை. ரத்தினமகுடம் அணிந்த கண்ணபிரான் கையில் குழலேந்தி இன்னிசை பொழிகிறார்! குழலில் ஒரு குஞ்சம் தொங்குகிறது! இடக்காலை வலக்கால் மேல் வைத்து ஏந்தியவாறு நின்று காட்சி தருகிறார்! பின்புறம் உள்ள ஒருபசு இசையில் மயங்கிக் கண்ணபிரானிடம் பாசம் கொள்கிறது! பாதத்தைத் தன் நாவால் நக்கி விடுகிறது. என்ன அற்புதம்!

சைவத் திருமடத்தில் காணும் கண்ணபிரானின் இந்தச் சிற்பம் ... அப்பப்பா! எத்தனையோ சிந்தனைகளை என்னுள் எழச் செய்தது.

சற்றே திரும்புகிறேன். அன்பர்கள் பண்டாரக் கட்டுக்குள் நுழைவதைக் காண்கிறேன். அடியேனும் தொடர்கிறேன்.

குருமணிகள் சித்ராசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அன்பர்கள் வணங்குகிறார்கள்; வழிபடுகின்றார்கள்; திருநீறு பெறுகின்றார்கள்; கூட்டுப் பிரார்த்தனை – நிறைகிறது.

குருநாதர் உபதேசிக்கிறார்கள்; திருநாவுக்கரசர் புராணத் தொடர்ச்சி, முதலில் மாதச்சிறப்பு அருள்கிறார்கள் செப்டெம்பர் மாதம்–தமிழ்மாதம் ஆவணி. ஆவணிமூலம் இறைவன்பிட்டுக்கு மண் சுமந்து வந்திக்கு அருளியதும், மணிவாசகருக்காக நரியைப் பரியாக்கியதும் இம்மாதத்தின் சிறப்புக்கள்.

குருமணிகள் ஒப்புநோக்கு முறையில் உபதேசம் செய்கிறார்கள். "மாணிக்கவாசகர், வந்தி இருவரும்சிவனடியார்களே! மணிவாசகருக்குத் தண்டனை கிடைத்தது; வந்திக்காக இறைவன் கூலியாளாய்ப் புறப்பட்டு வந்தான். இந்த வேறுபாடு ஏன்? தன்னுடைய அன்பரே ஆனாலும்மணிவாசகர் அரசாங்கப் பணத்தால் ஆலயம் எழுப்ப முயன்றது குற்றமே; யார் குற்றம் செய்தாலும் இறைவன் தண்டிப்பான்; வேண்டியவராயினும் தவறாது தண்டிப்பான்.

'வேண்டியவர் என்றால் அதிகவேலை செய்ய வேண்டும்; மிகவும் பொறுப்புடன் இருக்க வேண்டும். தோழமை பூண்ட சுந்தரர்க்கு இறைவன் அளித்த தண்டனைகள் எத்தனை! எத்தனை! - குருமணிகளின் இந்தக் கருத்து நமக்கு ஒருபாடமாக நல் உபதேசமாக - அமைகிறது!

உபதேசம் தொடங்கும் போதே 'பதிகம் ஏழ் எழுநூறு பகருமா கவியோகி' எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் ஏகாதசமாலை விருத்தத்தை இசையோடுஓதி அதன் பொருள் விளக்கத்தையும் அருளினார்கள்.

[ "நாவுக்கரசர் கவியோகி; அவர் பாடல்களைப் புத்தியினும் மனத்தினும்போற்றினால் வானம்உடையராகுவர்; பாரில்மனிதத் தன்மை உடையவராய்த் திகழ்வர்" -மேலும் சிலபாடல்வரிகளை எடுத்துக் காட்டி "முடிந்த முடிபான நிலை கிடைக்க வேண்டுமாயின் திருநாவுக்கரசர் திருவடிகளே துணை எனத் தெளிவுபடுத்தினார்கள்.]

நாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியாரைப் பற்றிக் குறிப்பு அருளும்போது நம்சமயமேன்மையை வெளிப்படுத்திய காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகியோர் பற்றி ஒப்பீட்டு முறைத்திறனாய்வுநோக்கில் உயர்ந்த தத்துவத்தைப் புலப்படுத்திய போது மெய்சிலிர்த்தது!

" திலகவதியார் பிதுர்வாக்கிய பரிபாலனம் செய்தார்! - தனக்குக் கணவனாக நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையார் போரில் வீரசுவர்க்கம் புக்கபின்பு - உயிர்தாங்கி, அம்பொன்மணி நூல் தாங்காது - அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி - இம்பூர்மனைத்தவம் புரிந்து இருந்தார்" - இது திலகவதியார் நிலை!

காரைக்கால் அம்மையார், இறையருளால் அதிமதுரக்கனி பெற்றார். கணவனார், அம்மையாரின் தெய்வத்தன்மை கண்டு

அவருடன் வாழ அஞ்சி வாழ்வு நீத்துச் சென்றார். அம்மையார் மனைத்தவம் செய்யாது – உடலின் தசைப் பொதி நீத்துப் பேய் வடிவம் பெற்றுச் சமயநெறி மேன்மை விளங்கச் செய்தார்!

மங்கையர்க்கரசியார் பாண்டியன் தேவி கணவன் சமண சமயம் சார்ந்தமையால் மனம் மறுகினார்; நொந்தார். மணாளனை மாற்றப் பெருமுயற்சிசெய்தார். இறையருளை எண்ணியிருந்தார். முயற்சிக்கு அருள் துணை நின்றது; பாண்டியனைத் தாய்ச்சமயம் புகுவித்தார். இது மங்கையர்க்கரசியார் மேற்கொண்ட நெறி.

குருமணிகள் முடிபாக அருளுகின்றார்கள் "பெரிய புராணத்தில் சமய நெறிக் கோட்பாடுகள் பலவாக உணர்த்தப்படுகின்றன. 63 நாயன்மாரும் 63 நெறிகளைக் காட்டுகிறார்கள்" – ஒரே மாதிரியான நெறியை எல்லோரும் மேற் கொள்ளவில்லை –ஆம்! அற்புதமான இத்தத்துவத்தைக் குருமணிகள் அருளிய போது மேலும் சிந்திக்கத் தொடங்குகின்றோம்!

திருநாவுக்கரசர் இறைவன் அருளால் பாடும் உணர்வு தோன்ற 'கூற்றாயினவாறு' என்று தொடங்கிப்பாடினார். தமக்குத் தகுதி இன்றியும் இறைவன் அருள் செய்ததாகப் பாடுகிறார். சூலைநோயால் தான் அருள் கிடைத்தது. இதனைச் சேக்கிழார் தம் திருவாக்கினல் "மைவாச நறுங்குழல் மாமலையாள் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும், இவ்வாழ்வு பெறத்தரு சூலை" என அருள்கின்றார்.

இங்ஙனம் இறையருள் பெற்ற நாவுக்கரசர் வரலாற்றை அருளிய குருநாதர் கூற்று என்பது எமனைக் குறிப்பதன்று – தலைவிகூற்று – தோழிக் கூற்று என்னும் தொடர்களில் ஆளப் படுவது போலச் 'சொல்' என்னும் பொருள் உடையது என்னும் கருத்தை வலியுறுத்தினார்கள்.

"இராவணன் அடைய வேண்டிய துன்பத்தை வாகீசர் அனுபவித்தார்" என்ற ஒரு குறிப்பையும் நுட்பமாக நமக்கு அறிவித்தார்கள். சமண சமயத்திற்குச் சென்றமையால் ஏற்பட்ட அருவருப்பு நாவுக்கரசருக்கு நெடுங்காலம் இருந்தது. அதற்காக அவர் வருந்தினார்; தட்சன் மகளாக இருந்த அம்மையார் தன் உடலில் அருவருப்புக் கொண்டு வருந்திப் பர்வதராஜன் மகளாக அவதரித்தமையை இங்கு ஒப்புநோக்கலாம்: இப்படி ஒரு புதிய சிந்தனையை நம் முன் வைத்துப் பல மேற்கோள்களையும் அருளினார்கள்.

இடையே ஓர் இனிய கருத்து! சமண சமயத்தில் இருந்த பாவத்தைப்போக்கவே கைத்தொண்டும், பாடல் தொண்டும், தியானத்தொண்டும் செய்யும் மனப்பான்மை நாவுக்கரசருக்கு வந்தது என்பது அது – ஆம்! உண்மைதானே!

"நாவுக்கரசர் கொண்ட இழிப்பு உணர்வு காரணமாக - சமணமதம் சார்ந்துசெய்த தீச்செயல்களைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினர். இதனை,

" மையல்துறை ஏறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர்
மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவும்சிவ
சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியனம் அருவுணர்வும் ஈறின்று
எழுந்திரு வாசகமும்
கையில் திகழும் உழவாரம் உடன்கைக் கொண்டு
கலந்து கசிந்தனரே "

என்னும் சேக்கிழார் வாக்குப் புலப்படுத்தும்

நாவுக்கரசர், மனத்தினுல் தான் செய்தது தவறு என உணாகிருர். தியானம் அருவுணர்வுடன் விளங்கினர். வாக்கினல் 'ஏழையேன் பண்டு இகழ்ந்தவாறே' என்று கூறி வருந்துகிருர். செயலால் உண்டாகிய குற்றம் போகுமாறு உழவாரப்பணி செய்கின்ருர். பின்னர்த் திருப்பெண்ணகடத்து இறைவனிடம் சூலக்குறி இடபக்குறி பொறித்தருள வேண்டிக் கொண்டதும், சிதம்பரத்தின் திருவீதிகளில் உடலால் புரண்டதும் (அங்கப் பிரதட்சனம்) கூடச் செயலால் வந்த குற்றம்தீர நாவுக்கரசர் வகுத்துக் கொண்ட நெறியே. திரு அங்கமாலை அருளியதும் இதனைமனத்துட் கொண்டேயன்ருே! - குருமணிகள் இவ் விளக்கம் அவர்களின் தெளிவான ஆய்வுநேக்கைப் புலப் படுத்தியது.

இக்கருத்தை 'உரையினில் வந்த பாவத்தை, உணர்வினல் ஆகிய நோய்களை, செயல்களால் உண்டான தீங்கை அனுப வித்துத்தான் போக்கவேண்டும்' -என அருளிச்செய்துதிருஞான சம்பந்தரின் திருநாரையூர்ப் பதிகப்பாடலை மேற்கோளாக்கிப் பொருத்திக் காட்டினர்கள்.

"அப்பர் ஒருதனிமனிதர்; - ஒரு முடிமன்னனையே எதிர்த்துப் போராடினர் - " நாமார்க்கும் குடியல்லோம் " என்று அருளிய நாவுக்கரசர் - தம்மால் மந்திரிகள் இழிபெயர் வாங்கக்கூடாது என்னும் தயவினல் அரசனைக் காணச்சென்ருர்."

அரசன் அமணர் பேச்சைக் கேட்டு மதிகெட்டான். நாவுக்கரசரை நீற்றறையில் இட்டான்; நஞ்சுகலந்த பாற் சோற்றை உண்ணச்செய்தான்; யானையைக்கொண்டு இடற விடுத்தான்; கல்லில் கட்டிக் கடலில் போட்டான்-இந்நிகழ்ச்சி களைக் குருமணிகள் விளக்கமாக அருளிய போது கண்கள் பனித்தன.

" பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர் "

என்ற குறள் நெறிக்குக் காட்டாக விளங்கி இறையருளால் நாவுக்கரசர் நஞ்சுகலந்த சோறுண்டும் உயிர் பிழைத்து கொலை செய் யானை கும்பிட்டது. கல்லில் கட்டி கடலில்விட்டபோது இறையருளால் 'சொற்றுணை வேதியன்' என்ற பதிகம் பாடிக் கரையேறினர் சேக்கிழார்.

" அருள்நயந்து அஞ்செழுத்தேத்தப் பெற்றஅக்
கருணை நா வரசனைத் திரைக்க ரங்களால்
தெருள்நெறி நீர்மையின் சிரத்தல் தாங்கிட
வருணனும் செய்தனன் முன்பு மாதவம் "

என இந்நிகழ்ச்சியைச் சிறப்பாகப் போற்றுகிறர். இவ்வாறு குருமணிகள் ஒவ்வொருநிகழ்ச்சியையும் விளக்கம் செய்தார்கள். நாவுக்கரசர் கரையேறியப்பகுதி 'கரையேறவிட்ட குப்பம்' என வழங்கப்படுவதையும் குறித்தார்கள்.

நாவுக்கரசர் தனக்குத் தந்தை, தாய், உடன்பிறந்தார் எல்லாம் இறைவனே என்பதை,

" ஈன்றுளுமாய், எனக்கு எந்தையுமாய், உடன்
தோன்றினராய் "

என அகச்சான்ருக அருள்கின்றர். மேலும், திருநீலக்குடித் திருப்பதிகத்தில்,

" கல்லினேடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லி நீர்புக நூக்கவென் வாக்கினுல்
நெல்லு நீள்வயல் நீலக்குடியான்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே "

என அகச்சான்ருக அருள்கிறர்.

திருநாவுக்கரசர் பெருமான் அருளால் தடைபல கடந்தார். திருவதிகைப் பெருமானை வழிபட வருகிறர். நாவுக்கரசர் தோற்றத்தின் சிறப்பை,

" தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே."

என்னும் ஓவியம் வந்ததுபோன்ற பெரியபுராணப் பாடல் கொண்டு குருமணிகள் நம் நெஞ்சத்தில் பதியவைத்து அருளினர்கள்.

திருவதிகைத் தரிசனம் நிறைந்தது; முன்னைய நிலைக்கு வருந்தியிருந்தார். சமண சமயத்திலிருந்த அருவருப்பு அவருக்கு நீங்கவில்லை – பின் திருப்பெண்ணாகடத்துத் திருத்தூங்கானை மாடச்சுடர்க்கொழுந்தைத்தரிசிக்கிறார். "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" என்கிறார். "சூலக்குறியும் இடபக் குறியும் என்மேல் பொறி" என்கிறார். தீமையை அகற்றச் சூலமும் அறம் காக்க இடபமும் பொறி' என்று முத்ராதானம் போலச் சூலமும் இடபமும் பொறித்துக்கொள்ளுதல்" என்று குருமணிகள் இதனை விவரித்தார்கள்.

அடுத்து நாவுக்கரசர் சென்றார் "தீவினையேன் அறியாதே பிழைத்தவாறே" என வருந்துகின்றார். போக்கிலேயே நாவுக் கரசரின் மனவருத்தம் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

சிதம்பர தரிசனத்து நாவுக்கரசர் பாடிய (மேற்கு) வாயில் வழிச் சென்றமையையும் அங்கும் "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்னும் திருப்பாடற்சிறப்பையும் மனம் கொளும் வண்ணம் பல சான்றுகள் காட்டி விளக்கினார்கள். மேலும், "என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக் குறிப்பே" என்பதற்கேற்பப்பதிலாக அமைவதே "பத்தராய்ப் பாடமாட்டேன்" என்னும் பதிகம். அதில் "உன் ஆடல் காண்பான் அடியேனன் வந்தவாறே" என்ற பதில் அமைந் திருக்கிறது என்று குறித்தபோது குருமணிகள் எத்தனை நுட்ப மாகச் சிந்திக்கின்றார்கள் எனப்பெருமைக் கொள்கிறோம்!

அப்பர் என்ற பெயர் முறைப்பெயர், ஞானசம்பந்தர் நாவுக் கரசரை 'அப்பரே' என்றார். நாவுக்கரசரோ 'அடியேன்' என்றார். தந்தையாக நினைத்த ஞானசம்பந்தர் நிலை சத்புத்திரமார்க்கத்தை யும், அடியவராகத் தன்னைக்கருதிக்கொண்ட நாவுக்கரசர் நிலை தாசமார்க்கத்தையும் அறிவுறுத்துவது – என்று இருபெரும் அருளாளர்கள்பற்றித் தெளிவாக உபதேசித்தார்கள்.

சீகாழிக்குத் திருநாவுக்கரசர் எழுந்தருளியது வரை உள்ள புராணத்தைச் சமயதத்துவம் விளங்குமாறு மேற்கோள்கள் பல காட்டி அருளுபதேசம் வழங்கிய குருமணிகளை நன்றி பெருக் கோடு வணங்கினோம். மங்கலவாழ்த்துடன் கூட்டம்நிறைந்தது.

பண்டாரக்கட்டிலிருந்து வெளியில் வருகிறோம். இனியகனிச் சாறும் இன்முகத்துடன் உபசரிப்பும் கிடைக்கிறது. நிறைவோடு இல்லம் திரும்புகிறோம்!

வாழ்க குருமணிகள்!

# தாய்மதத்திற்குத் திரும்பினார்கள்

பட்டுக்கோட்டை, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தில் பணி மேலாளராக வேலை பார்த்துவரும் **திரு. தி. தே. பால்சுந்தர ராஜ், பி. இ.,** என்பவரின் முன்னோர்கள் இந்துவாக இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள். இவர் தொடர்ந்து கிறிஸ்தவ மதத்தில் இருக்க விரும்பவில்லை. இந்துவாக மீண்டும் வாழத் தாய் மதத்திற்குத் திரும்ப விரும்பினார். இந்துமதக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க ஆர்வம் உள்ளவர் எனத்தெரிவித்தார். மறுபடியும் இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாற மாட்டேன் என உறுதிமொழி கூறினார். 13—8—84ல் தருமபுரம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ துர்க்காதேவி சந்நிதியில் இந்து மதத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். தி. தே. பால்சுந்தரராஜ் என்னும் பெயரை மாற்றி இவருக்கு தி. தே. பாலசுப்பிரமணியம், பி, இ., என்னும் திருநாமம் சூட்டப்பட்டது. தாய் மதத்திற்கு அவர் திரும்பியதற்கு அத்தாட்சியாகச் சான்றிதழ் வழங்கப்பட்டது, ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் முன்னிலையில் இது நிகழ்ந்தது.

4—10—84 அன்று விஜயதசமி நன்னாளில் ஒரு கிறித்தவக் குடும்பம் தாய் மதத்திற்குத் திரும்பியது. அவர்களது பெயர் திரு. அருளானந்தம், ஸ்டீபன், திருமதி. ஆரோக்கிய மேரி. அவர்களுக்கு முறையே மாரியப்பன், கந்தசாமி, தனபாக்யம் எனத் திருநாமங்கள் சூட்டப்பட்டன.

---

**கடிதம்:**

ப. சந்தானம்

1-99. குப்பான்குளம்,
சாக்கோட்டை - 612401
15—9—84

பெருமதிப்பிற்கும், பேரன்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய தருமை ஆதீனக் குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகளுக்குத் தெண்டனிட்ட விண்ணப்பம்.

தாங்கள் அண்மையில் நடைபெற்ற ஆவணி மூலத்திரு நாளில் அருளியுள்ள அறிவுரைகளை "தினமணி" நாளிதழில் கண்டு மகிழ்வுற்றேன். நல்ல கருத்துக்கள் தாங்கள் போன்றோர் தற்கால நிலையில் மக்களுக்கு அறிவுரைகள் தந்து வழிப்படுத்துவது வேண்டற்பாலது.

# செய்திகள்

## ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவாரப்பாடல்பெற்ற சிவத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

இம்மாதம் 22—9—84 சனிக்கிழமையன்று திருநாவலூர் – திருவாமூர் ஆகிய திருத்தலங்களில் ஆயில்யத்திருநாள் வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. இத்தலத்து ஈசர் ஸ்ரீ பக்தஜனேசுவரருக்கும் அம்பாளுக்கும், சிறப்புவழிபாடுகள் நிகழ்ந்தன. 'திருநாவலூர்த் திருப்பதிகம்' என்றநூல் வெளியிடப்பெற்றது. தருமையாதீனத்தமிழ்ப்புலவர் வித்துவான்திரு.வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றினர். தலத்திருப் பதிகப்பாராயணம் செய்யப்பெற்றது. அன்பர்பலர்வழிபாட்டிற் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜை விழா

### தருமையில்

சந்தானகுரவருள் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்திதேவர் குருபூஜைவிழா புரட்டாசித் திங்கள் பூரநாள் கூடிய 24—9—84 திங்கட்கிழமையன்று நிகழ்வுற்றது. காலை, திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில்சந்தானசாரரியர்களுக்குவிசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. மாலை 7 மணி அளவில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., 'அருணந்திதேவர் அருள்வரலாறு' பற்றியும், வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., 'அருணந்திதேவர் அருள் நூல்கள்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் காலை மாலை இருவேளைகளிலும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபாடாற்றி, அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள்.

### திருத்துறையூரில்

ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அவதாரத் தலமாகிய திருத்துறையூர் ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் ஆலயத்தில் சுவாமி அம்பாள் ஆகிய மூர்த்தங்களுக்கும், திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியிலுள்ள குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ அருணந்தி தேவருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மாலை 7 மணியளவில் திருத்துறையூர்த் திருக்கோயிலில் வித்துவான் திரு. சொ. முத்தையா தேசிகர், எம். ஏ., 'மெய்கண்டார்' பற்றியும் வித்துவான் திரு. ந. சண்முகசுந்தர தேசிகர், 'அருணந்திதேவர்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். அன்பர்பலர் வழிபாடாற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாத முதல் ஞாயிற்றுக் கிழமையன்றும் காலை சரியாகப்பத்துமணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்து வருகிறது. சென்றமாதம் 39 ஆம் அருளுபதேசக் கூட்டம் 7—10—84 அன்று நிகழ்வுற்றது.

முதலில் வழிபாடும் கூட்டுப் பிரார்த்தனையும் நிகழ்ந்தன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகத் திருநாவுக்கரசர் புராணத்தை உபதேசித்தார்கள். நாவுக்கரசர் சமணர்களால்பட்ட துன்பம் முதலாகச் சிதம்பர தரிசனம் முடித்துச் சீகாழிக்கு எழுந்தருளல்வரை உபதேசிக்கப்பட்டது. நாவுக்கரசர் வாழ்க்கைநெறி பற்றியும் திலகவதியாரின் மனைத்தவம் பற்றியும் குருமணிகள் அரியதத்துவங்கள் பலவற்றை இனிய முறையில் தக்கமேற்கோள்களுடன் உபதேசித்தார்கள். (இம்மாத இதழில் உபதேசம் பற்றிய கட்டுரையில் உபதேசக் குறிப்புக்கள் தரப்பெற்றுள்ளன.)

## நாயன்மார் குருபூஜைத் திருநாட்கள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஆவணி அனுஷ நாளில் (2—9—84) குலச்சிறை நாயனர், மூலநாளில் (4—9—84) குங்குலியக் கலய நாயனர், புரட்டாசி உத்திராட நாளில் (3—10—84) ஏனாதிநாத நாயனர் குருபூசைத் திருநாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றன. தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., புராணம் வாசித்து வரலாறு கூறினர். ஸ்ரீ நடராஜ மூர்த்திக்குக் குருபூஜை நாள்களில் விசேஷ அருச்சனை வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. தருமையாதீன தேவாரப் பாடசாலை, வேதசிவாகம பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். புராண விரிவுரைக்குப் பின் பிரசாதம் வழங்கப்பெற்றது.

## தருமையாதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா

தருமையாதீனத்தில் 2, 3, 4—9—84 ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப்பெருவிழாவும் ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழாவும்மிகச்சிறப்பாகநடைபெற்றன. விழாநாட்களில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீசொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

4—9—84 செவ்வாய்க் கிழமை ஆவணிமூலத் திருநாளன்று காலை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை நிகழ்த்தி 'சிவபூஜா விதி' என்ற விழாமலர் வெளியிடப்பெற்றது.

இந்நாளில் ஆண்டுதோறும் அறிஞர் ஒருவருக்குச் சிறப்புப் பட்டமளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசியருள்வார்கள். இவ்வாண்டுவரை 34 அறிஞர்கள் பட்டம்பெற்றுள்ளனர். இம்முறையில் ஆவணிமூலநாள் மாலை வழிபாட்டின்போது தஞ்சை வழக்கறிஞர் திரு. டி. என். இராமச்சந்திரன், பி. ஏ., பி. எல்., அவர்கட்குச் 'சைவசித்தாந்தக் கலாநிதி' என்ற பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி ஆசிவழங்கினார்கள்.

ஆவணிமூல விழாவையொட்டி மூன்று நாட்கள் தருமையாதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழா, திருநெறிய தெய்வத்தமிழ்மன்றத்தில் நிகழ்வுற்றது.

ஸ்ரீ கயிலைக் குருமணி பாலர் பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டுவிழா 2—9—84 ஞாயிறன்று மாலை 3 மணியளவில் விநாயகர்திருநாளாகக்கொண்டாடப்பெற்றது. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் வித்துவான் திரு சொ. முத்தையன், எம். ஏ., திருமதி. மீராகிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., திரு. சா. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., ஆகியோர் முறையே விநாயகர் வரலாறு, விநாயகர் வழிபாடு, விநாயகர் தோத்திரங்கள் பற்றி உரையாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தருமையாதீன தேவாரப் பாடசாலை, வேதசிவாகம பாடசாலை ஆண்டுவிழா 3—9—84 திங்கட்கிழமை மாலை 3 மணிக்குமுருகன் திருநாளாகக்கொண்டாடப்பெற்றது. தருமையாதீனப்பல்கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., பேராசிரியர்கள் வித்துவான் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்., வித்துவான் திருமதி ப. நீலா எம். ஏ., ஆகியோர் முறையே முருகன் வரலாறு, முருகன் வழிபாடு, முருகன்

தோத்திரங்கள் பற்றி உரையாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீ கயிலைக் குருமணி பாலர்பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி சைவசித்தாந்தக் கல்லூரி ஆண்டுவிழா 4—9—84 செவ்வாயன்று மாலை 7 மணியளவில் சிவபெருமான் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. இறைவணக்கத்தின்பின் ஸ்ரீல ஸ்ரீகுருமகாசந்நிதானதில் அருளாசி வழங்கினர்கள். தருமையாதீனக் கல்விநிலையங்களின் ஆண்டு அறிக்கைகள்படிக்கப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தில் கல்விநிலைய மாணவ மாணவிகட்குப் பரிசுகள் வழங்கியருளினர்கள். தருமையாதீனப்பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ., பி. எட்., சிவபுராணம்பற்றி உரையாற்றி ,சைவசித்தாந்தக்கலாநிதி என்ற பட்டம்பெற்றதஞ்சைவழக்கறிஞர் திரு. டி என். இராமச்சந்திரன் பி. ஏ., பி. எல்., அவர்களைப் பாராட்டினர் சைவசித்தாந்தக் கலாநிதி திரு டி. என். இராமச்சந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றி நன்றி தெரிவித்துக்கொண்டார். தவத்திரு. வீரபாகு சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளின் உத்தரவுப்படி ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி நினைவுச்சிறுகதைப் போட்டிபற்றி அறிவித்து நன்றியுரையாற்றினர்கள், விழாவை அடுத்து வேலூர் திரு. க. சொக்கலிங்கம், சீகாழி திரு. சா. திருஞானசம்பந்தம் குழுவினர் சொக்கநாதவெண்பாவைப் பக்தி இசைநிகழ்ச்சியாகப் பாடி மகிழ்வித்தனர். அன்பர் பலர் வந்திருந்து இறையருளும் குருவருளும் பெற்றனர்.

## துர்க்காதேவிக்கு 34 ஆவது சதசண்டி வேள்வி விழா

தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு 26—9—84 முதல் 4—10—84 முடிய ஒன்பது நாட்களும் நவராத்திரி விழாவை முன்னிட்டு உலகநலம்கருதி சதசண்டி வேள்வி விழா ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்கா தேவிசந்நிதியில்புதிதாகக்கட்டப்பெற்றுள்ளமகாமண்டபத்தை ஒட்டி மலர்களாலும் மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த மகாவேள்விமண்டபத்தில் யாககலசங்கள்வைத்து, அலங்கார ஆராதனைகள் செய்வித்து, சிறப்பான முறையில் சதசண்டி வேள்வி நிகழ்த்தப்பெற்றது நாள்தோறும சுவாசினீ, குமாரி, வடு பூஜைகள், சதுர்வேத பராயணம், தேவீமகாத்மிய பாராயணம், திருமுறைகள். அபிராமியந்தாதி பாராயணம், ஸ்ரீ துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவுக்கு சகஸ்ரநாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் ஆகியன நடைப்பெற்றன. (576 இல் பார்க்க)

# எதிர் காலம்

## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( இரக்தாக்ஷி ஐப்பசி 1௳ முதல் 30௳ முடிய )

( 17—10—1984 முதல் 15—11—1984 முடிய )

ஸ்ரீ இரக்தாக்ஷி ஐப்பசி 1௳ புதவாரம் புனர்பூச நக்ஷத்திரம் பவ கரணம் கூடிய காலத்தில் சூரியஉதயம் முதல் 8 நாழிகை 41 விநாடிக்கு விருச்சிக லக்கனத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரிய பகவான் கன்னியாராசியிலிருந்து துலாராசி சங்கிரமணமாக ஐப்பசி மாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று துலா காவேரி ஸ்நானாரம்பம் மாதம் பூராவும் பிராத காலத்தில் துலாஸ்நானம் செய்து இறைவனைப் பிரார்த்திப்பதால் சகல நன்மைகளும் பாக்கிய விருத்தியும் ஏற்படும். சங்கிரமண கால கிரகஸ்திதியினால் உலகில்நெருக்கடி பிரச்சினைகள் அரசு அவசர பிரகடனங்கள் பிறப்பித்தல் ஆகிய நிலைமை ஏற்படச் செய்யும். சர்வேஸ்வரனருளினால் எல்லாவற்றிலும் பிரஜா சம்ரக்ஷணம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஆன்றோர்களால் தர்மங்கள் தெய்வ புண்ணிய காரியங்கள் இறைமை நெறியில் நடந்து கொண்டிருக்கும். உலகில் சர்வபிரஜைகளுக்கும் ஜீவனோபாயம் நல்ல விதத்தில் கிடைக்கப் பெற்று உய்வு உண்டாகும்.

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் ஈஸ்வரனருளில் வந்து சிவராஜயோகத்தில் திருவீற்றிருக்கின்ற ஞானகுருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் உலகில் மாந்தர்களின் அஞ்ஞானம் நீங்கிக் கல்விகலைஞானங்களில் சிறப்புற்று விளங்க அருள்பிரசாதம் வழங்குவர். உயர் ஞானம் எய்த மெய் வழிபிரஸ்தாபித்து அருளிச்செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் சிறப்புற நடைபெறும் மாந்தர்கள் சிவநெறியில் மிளிர்ந்து நல்லபுண்ணியமாக அறம் செய்து சீரிய வாழ்க்கை நடத்துவர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் நல்ல விதத்தில் வந்து சேரும். நல்ல வகையில் செலவும் செய்விக்கும். அக்டோபர் 29உ ஆனால் உடல் ஆயாசம் நீங்கும். தான தர்மம் செய்யும். எல்லாக் காரியங்களும் வெற்றியாக நடக்கும். அக்டோபர் 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வரும். சகோதரர் புத்திரர்களின் நலனில் செலவுமாகும். மனைவி நலம் சாதாரணமாக இருந்துவரும். நவம்பர் 10உக்கு விசேஷ நன்மையை உண்டு பண்ணும். எல்லாக்காரியங்களும் ஜெயபிராப்தியாக நடந்து கொண்டிருக்கும். அக்டோபர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்து கொண்டிருக்கும். சகோதரரால் பிரச்சினை வந்து நீங்கும். கால் நடை வாகனத்திற்கு க்ஷீணம் காணும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய, குடல்அழற்சி போன்றவை குணமாகும். அக்டோபர் 31 நவம்பர் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும் தன வருமானம் தானிய விளைவு நன்றாக ஏற்படும். வஸ்திரபூஷணம் தரும். சம்பிரதாய காரியங்கள் இஷ்ட சித்தியாக நடக்கும். இயந்திர வாகனங்களில் நல்லன ஏற்படும். வியாஜ்ஜிய வழக்குகளில் ஜெயம் தரும். நவம்பர் 2, 3, 4, தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தனவருமானம் வந்து கொண்டிருக்கும். இரத்தின பூஷணம் தரும். நவம்பர் 2 தேதியளவில் மூதாதையர் பொருளில் நல்லன வரும். வியாஜ்ஜிய வழக்குகள் வெல்லும். நவம்பர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். நல்ல பண வருமானம் வரும். குடும்ப பிரச்சினைகளில் அதிக செலவும் ஆகும். பந்துவில் ஒருவர் காரணமின்றி விலகுவர். வயிற்றில் வலி வந்து குணமாகும். எல்லாக் காரியங்களும் நல்ல விதமாகவே கைகூடி வருவதாகும். நவம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் கணிசமாக வரும். தந்தை உடல் நலத்தில் பாதிப்பு ஏற்பட்டுக்குணமாகும். மனைவி வழியில் ஓர் மனுஷாள் காரண மின்றி விலகுவர். அக்டோபர் 29 தேதியளவில் எழுத்துமூல விஷயங்களில் விசேஷமாக நன்மைகளையும் பணவரவும் தரும். நவம்பர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் பெரும் மதிப்பில் வரும். நெருக்கடியாகச்செல வினங்களும் இருந்து வரும். உறுதி வார்த்தை அளித்தல் கௌரவம் மேலிடுதல் ஆகும். ஓர் ஆபத்தில் சிக்கிச்சமாளித்தல் ஆகும். நவம்பர் முதல் எல்லாவற்றிலும் வெற்றியை உண்டாக் கும். நவம்பர் 12, 13தேதிகள்சந்திராஷ்டமம். சனி ஞாயிறுசுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுப பலனை நடக்கும். தன வரு மானம் நல்ல விதத்தில்வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் உத்தியோகத்தில் விசேஷ நன்மைகளை உண்டு பண்ணும். வெகு ஜனபிரீதியும் போற்றுதலும் ஏற்படும். எல்லாக் காரியங் களையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடித்தல் ஆகும். அக்டோபர் 18, 19 நவம்பர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். பண வரு மானம் ஒப்பந்த லேவாதேவிகள் நல்லவிதத்தில் இருந்துவரும். சுபநிகழ்ச்சிகளில் சந்துஷ்டி நிலவும். மனைவி வழியினர்

முன்னேற்றத்தில் ஈடுபாடு ஆகும். எல்லாக்காரியங்களும் எண்ணியிருந்தபடி இனிதுநடைபெறும். அக்டோபர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம், புதன் வியாழன் சுபம்.

11. கும்பம்:- அவிட்டம் ½ - சதயம்-பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாகங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். சகோதரி வழியில் அவசிய செலவும் ஏற்படும். கால்நடைக்கு க்ஷீணம்காணும். மனைவிக்குப் பித்தாதிக்க நலிவு ஏற்பட்டுக்குணமாகும். எல்லாவற்றிலும் ஈஸ்வர கடாக்ஷத்தில் நன்மையாகவே நடந்துவரும். அக்டோபர் 22, 23, தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். தனவருமானம் மதிப்பாகவரும். சகோதரகிலேசம் ஒருபுறம் இருப்பினும் நவம்பர் முதல் அது நீங்கும். சிரமமாக இருந்த எல்லாக்காரியங்களும் எளிதில் நடக்கும். அக்டோபர் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

---

( 572 ஆம் பக்கத் தொடர்ச்சி)

26—9—84 புதன் கிழமைமுதல் 4—10—84 வியாழக்கிழமை வரை நாள்தோறும் இரவு வழிபாட்டின்போது நிறைவாக ஆனந்ததாண்டவபுரம் “வித்தியாவாசஸ்பதி” பிர்மஸ்ரீ பி. இராமதாச ஐயர் அவர்கள் தேவிமகாத்மியம் பற்றி விரிவுரை ஆற்றினார்கள். 28—9—84 வெள்ளிக்கிழமைமாலை 7மணியளவில் தஞ்சை, அரசினர் மகளிர்கல்லூரித்தமிழ்ப்பேராசிரியை, திருமதி சாரதா நம்பியாரூரன், எம்.ஏ., எம். ஃபில்., சொக்கநாதவெண்பா அபிராமிஅந்தாதி, தேவாரம் பக்திப்பாடல்கள் பாடினார்கள். 2—10—84 செவ்வாய் இரவு 8 மணியளவில் மயிலாடுதுறை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம் ‘அன்பகம்’ செவிடர் ஊமையர் பள்ளி மாணவிகளின் கலைநிகழ்ச்சி ஆதீனத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் மிகச்சிறப்பானமுறையில் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இந்நிகழ்ச்சியின் போது எழுந்தருளியிருந்து ஆசீர்வதித்தார்கள்.

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி திருக்கோயிலுக்குக் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளியிருந்து வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கினார்கள்.

தருமையாதீனம்

# ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஞானசம்பந்தர் அட்டகம் | ... ரூ. | 3—00 |
| 2. | கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி | ... | 0—25 |
| 3. | பொன்வண்ணத்தந்தாதி | ... | 0—25 |
| 4. | கந்தர் கலிவெண்பா | ... | 0—35 |
| 5. | நடராஜ சதகம் | ... | 1—35 |
| 6. | சொக்கநாத வெண்பா | ... | 0—75 |
| 7. | சிவப்பிரகாசம் | ... | 1—30 |
| 8. | திருக்களிற்றுப்படியார் | ... | 0—65 |
| 9. | சிவஞானசித்தியார் (சுபக்கம்) | ... | 2—80 |
| 10 | இருபா இருபஃது | ... | 1—10 |
| 11. | உண்மை விளக்கம் | ... | 0—40 |
| 12 | உண்மை நெறிவிளக்கம் | ... | 0—30 |
| 13. | போற்றிப்பஃறொடை, வினாவெண்பா | ... | 1—00 |
| 14. | திருவருட்பயன் | ... | 2—50 |
| 15. | நெஞ்சுவிடுதூது | ... | 0—55 |
| 16. | சங்கற்ப நிராகரணம் (தமிழ்) | ... | 0—50 |
| 17. | சங்கற்ப நிராகரணம் (ஆங்கிலம்) | ... | 3—50 |
| 18. | சித்தாந்த அட்டகம் | ... | 1—00 |
| 19. | ஞானாவரண விளக்கமும் மாபாடியமும் | ... | 5—00 |
| 20. | பிராசாத நான்மணிகள் | ... | 0—50 |
| 21. | செந்தமிழ்ப் பூம்பொழில் (பாகம் II) | ... | 1—75 |
| 22. | செந்தமிழ்ப் பூம்பொழில் (பாகம் III) | ... | 1—00 |
| 23. | செந்தமிழ்ப் பூம்பொழில் (பாகம் IV) | ... | 2—75 |
| 24. | செந்தமிழ்ப் பூம்பொழில் (பாகம் V) | ... | 3—50 |
| 25. | பிரமசூத்திரம் | ... | 1—25 |
| 26 | புவனாம்பிகை கலைக்ஞானதீபம் | ... | 1—25 |
| 27 | திருக்குறள் அறத்துப்பால் | ... | 1—50 |
| 28. | கந்தபுராணத் திரட்டு | ... | 2—00 |
| 29. | கிளிவிடுதூது | ... | 0—25 |
| 30. | கடம்பவன புராணம் | ... | 10—00 |
| 31. | தமிழ்வளர்க்கும் தருமபுரம் | ... | 5—00 |
| 32 | ஸ்ரீ குருஞானசம்பந்தர் (ஆங்கிலம்) | ... | 5—00 |
| 33. | சிவஞானபோதம் (ஆங்கிலம்) | ... | 10—00 |
| 34. | சைவ அனுட்டான விதி | ... | 0—45 |
| 35, | நித்தியகன்மநெறி | ... | 1—50 |
| 36. | ஸ்ரீ கயிலை குருமணி நினைவு மலர் | ... | 4—50 |
| 37. | கனகாபிஷேக விழா மலர் | ... | 5—00 |
| 38, | அப்பர் சுவாமிகள் குருபூஜை விழா மலர் | ... | 2—00 |
| 39. | Mutt and Temples | ... | 2—50 |
| 40. | குருவழிபாடு | ... | 2—00 |
| 41. | சைவ சமய சாதனங்கள் | ... | 0—30 |
| 42. | அனைத்துலக சைவ சித்தாந்த விழாமலர் | — | 15—00 |

| | | | |
|---|---|---|---|
| 43. | சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் | ... ரூ. | 15—00 |
| 44. | திருவருட்செய்தி (இரண்டாம் தொகுதி) | ... | 7—50 |
| 45. | சதமணிக்கோவை | ... | 3—00 |
| 46. | Saiva Siddhantam (English) | ... | 16—50 |
| 47. | காவிரித்தென்கரைத்தலங்கள் திருப்பதிகங்கள் (172) | | 51—70 |
| 48. | காவிரி வடகரைத் தலங்கள் திருப்பதிகங்கள் (63) | | 22—75 |
| 49. | பாண்டிநாட்டுத்தலங்கள் திருப்பதிகங்கள் (14) | | 8—60 |
| 50. | பத்தாம் திருமுறை (இரண்டாம்பகுதி) | ... | 25—00 |

ரூபாய் ஐம்பதுக்கும் மேற்பட்ட மதிப்புடைய நூல்களை ஒரே நேரத்தில் வாங்குபவர்களுக்கு 15 சதம் கழிவும், புத்தக விற்பனையாளர்களுக்கு 20 சதம் கழிவும் வழங்கப்படும். வேண்டிய நூல்களுக்கு உரிய தொகையைப் பணவிடை (M.O.) அல்லது உண்டியல் (draft) மூலம் அனுப்பி நூல்களைப் பெறலாம். V.P.P. வழி நூல்கள் அனுப்ப இயலாது. தபால் செலவுகள் தனி.

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமையாதீனம்-மாயூரம் 609 001-தஞ்சைமாவட்டம்.

---

## அடக்கவிலையில் சைவத் திருமுறை நூல்கள்

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்
1, 4, 8, 10 ஆம் திருமுறைகள்

வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் 2, 5, 9, 10 ஆம் திருமுறைகள்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
3 ஆம் திருமுறை

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
3, 6, 9 ஆம் திருமுறைகள்

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்
7, 9 ஆம் திருமுறைகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில்
3, 9 ஆம் திருமுறைகள்

| | | | |
|---|---|---|---|
| முதல் திருமுறை | ரூ 3—50 | ஆறும் திருமுறை | ரூ 8—00 |
| இரண்டாம்திருமுறை | 5—00 | ஏழாம் திருமுறை | 8—00 |
| மூன்றும் திருமுறை | 5—75 | எட்டாம் திருமுறை | 9—00 |
| நான்காம் திருமுறை | 8—00 | ஒன்பதாம் திருமுறை | 5—50 |
| ஐந்தாம் திருமுறை | 8—00 | பத்தாம் திருமுறை (முதற்பகுதி) | 15—00 |

அஞ்சல் செலவு தனி, சம்பந்தப்பட்ட தேவஸ்தானங்களுக்கு எழுதித் தங்கள் தேவைக்கு அன்பர்கள் தொடர்பு கொள்க.